# அழுகைகள் நிரந்தரமில்லை



அலெக்ஸ் பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகைகள் நிரந்தரமில்லை

அலெக்ஸ் பரந்தாமன்

ஜீவநதி வெளியீடு

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகைகள் நிரந்தரமில்லை
(சிறுகதைத்தொகுப்பு)

ஆசிரியர் : அலெக்ஸ் பரந்தாமன்
முதற் பதிப்பு : ஐப்பசி 2014
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
அட்டைப்பட வடிவமைப்பு : க.பரணீதரன்
வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம் : 64
விலை : 250/-
அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி

Alukaikal Nirantharamillai
(Short stories)

Author : Alecks Paranthaman
First Edition : October 2014
Copy Rights : Author
Cover design : K.Bharaneetharan
Publication: Jeevanathy, Kalaiaham, Alvai
Pages : 64
Price : 250/-
Printers : Bharanee Printers, Nelliyady
ISBN : 978-955-4676-17-6

**ஜீவநதி வெளியீடு – 38**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
மாலை கவியும் பொழுதில்
வலையன் மடத்து
வடலிப் பனைகளுக்கு நடுவில்
வெடித்துச் சிதறிய
எறிகணைகளோடு
தங்கள்
விழிகளையும் மூடிக்கொண்ட
எனது
உடன் பிறந்த அக்காமார்
இருவருக்கும்
இது...

## சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 38 ஆவது தொகுப்பாக புதுக்குடியிருப்பு வாழ் அலெக்ஸ் பரந்தாமனின் "அழுகைகள் நிரந்தரமில்லை" என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளிவருகின்றது. எண்பதுகளின் பிற்பகுதியில் இருந்து எழுதத்தொடங்கி இன்று வரை எழுதிக் கொண்டிருக்கும் இந்நூலாசிரியர் ஈழநாதம், தினமுரசு பத்திரிகைகளில் ஒப்புநோக்குநராக, உதவி ஆசிரியராக, பிரதேச செய்தியாளராக பணிபுரிந்தவர். கவிதை, சிறுகதைத் துறையில் தன் எழுத்து வாண்மையால் நல்ல படைப்புகளை இலக்கிய உலகிற்கு தந்து கொண்டிருப்பவர்.

வன்னி போரின் போது அப்பிரதேசத்தில் வாழ்ந்த ஒரு படைப்பாளியின் உள்ளத்தில் இருந்து எழுந்த உண்மைப் பதிவுகளாய் இந்நூலில் உள்ள சிறுகதைகள் அமைந்துள்ளன. இந்நூல் வன்னி போர் பற்றிய பல உண்மை சம்பவங்களைப் பறை சாற்றுகின்றது. "வாழ்வில் ஏற்படும் துன்பங்களை மறந்து சந்தோஷமான காலங்களை எதிர்பார்த்து வாழ வேண்டும்" என்ற கருத்தை மனிதர்களுக்குள் விதைப்பதாக இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் காணப்படுகின்றன.

இந்நூலில் உள்ள சோகம் நிரம்பிய கதைகள் வாசகர்களாகிய உங்கள் மனதை தொடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்நூலாசிரியர் சோர்ந்து விடாது இன்னும் பல நல்ல படைப்புகளை தருவார் என்ற நம்பிக்கையை இந்நூல் தருகின்றது. வாழ்த்துக்கள்.

**- க.பரணீதரன்**
**ஆசிரியர் ஜீவநதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எங்களுக்கான ஒரு நிம்மதி வேண்டுமென்று நாங்கள் போராடிய நாட்களைவிட, அழுதகாலங்கள் அதிகம்! அதற்கு வன்னிப்போர் ஒரு சாட்சியம்!

போரின் உச்சத்துக்குள் பெற்றுக் கொண்ட அனுபவங்களோடும், தரிசனங்களோடும் அந்த "அழுகைகள் நிரந்தரமில்லை" என்ற புதியதொரு நம்பிக்கையோடும் இன்னமும் வாழ்வை நேசிக்கும் மனிதனாக உங்கள் முன், முதன் முதலாக ஒரு தொகுப்போடு வந்து நிற்கின்றேன்.

இத்தொகுப்பினை ஒரு 'காலம் பிந்திய வரவாக'த்தான் நான் பார்க்கின்றேன். நேரத்தோடு தொகுப்பாக்குவதற்கு அக;புறச் சூழ்நிலைகள் இடமளிக்கவில்லை என்பதே வெளிப்படை.

இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகளை... குறிப்பாக 'சூனியங்கள்', 'முருங்கை மரத்து வேதாளங்கள்', 'சமூக மாறுதல்கள்' போன்றவற்றை, பத்திரிகைகளில் படித்த ஒருசிலர், என்முன்னே 'முகம் சுழித்து' விமர்சித்தவையெல்லாம் இப்பொழுதும் நினைவுகளால்... நிதர்சனமாய் எனக்குள்.

"மாற்றங்களை எங்கள் சமூகம் ஒப்புக்கொண்டு விடுவதில்லை. ஒப்புக்கொண்டாலும், அது தன் வயிற்றெரிச்சலைக் காட்டாமல் விடுவதில்லை..." என்று 'கங்கைக்கரை ஓரம்' நாவலில் செங்கை ஆழியான் அவர்கள் எழுதியது ஞாபகத்திற்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை.

எங்கள் வாழ்வைத் தொலைத்த போரானது ஓய்ந்து போனபின், 'அனைவராலும்' வஞ்சிக்கப்பட்ட நாம், மீண்டும் வாழத்தான் வேண்டு மென இங்கு யாவரும் மனதார விரும்புவதாக இருந்தால், சமூகத்தின் மத்தியில் ஏற்படும் சில மாற்றங்களை மனக்கசப்புடன் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

என்பதுகளின் பிற்பகுதியில் இருந்து எழுதத் தொடங்கிய நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இன்று வரை நான் எழுதிய படைப்புக்களை ஒன்று சேர்த்துப் பார்த்தால் இந்நூல் எட்டாவது தொகுப்பாக வரவேண்டியதாகிறது. போருக்குப் முன்னைய காலங்களில் எழுதிய படைப்புகள் யாவும் முள்ளி வாய்க்காலோடு முகவரியிழந்து... முற்றுப்பெற்றுப்போன பின், போருக்குப் பின்பு எழுதிய படைப்புக்களே இப்பொழுது புதியதாக முதல் தொகுப்பாக வெளிவருகின்றது.

அதுவும் –

எனது மாமனார் தர்மலிங்கம் குணசிங்கம் (மனைவியின் தந்தை) மாத்தளன் கப்பல்றோட்டில் ஒரு ஓலைக்கொட்டிலுக்குள் இருந்தவேளை, சடுதியாக வந்து, அதற்குள் விழுந்து வெடித்த ஓர் எரிகுண்டு எறிகணை யின் நிமித்தம், அவரும் வேறு இருவரும் கொட்டிலோடு எரிந்து... உடல்கள் கருகிப் போன அந்த துயர நிகழ்வையே போருக்குப்பின் முதன் முதலாக நான் 'அனலெனவாகிய நினைவுகள்' எனும் தலைப்பில் சிறுகதையாக எழுதியுள்ளேன். இக்கதையைப் பிரசுரித்த 'ஞாயிறு தினக்குரல்' பத்திரிகைக்கு எனது நன்றிகள்!

எனது சிறுகதைகளை ஒரு நூலாக்கிப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குள்ளே இருந்த போது, என் நிலையறிந்து 'அழுகைகள் (என்றுமே) நிரந்தரமில்லை' என்று எனை ஊக்குவித்து, இத்தொகுப்பை வெளியிடச் செய்வதற்கு ஆலோசனை வழங்கிய தம்பி திரு.கலாமணி பரணீதரன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்!

எனது முதற்சிறுகதைக்குப்பின், தொடர்ந்தும் எனது படைப்பு களுக்கு களம் அமைத்துத்தந்த ஞாயிறு தினக்குரல், தினமுரசு வாரமலர், சுடரொளி வாரமலர் ஆகிய பத்திரிகைகளுக்கும் கலை இலக்கிய மாத சஞ்சிகையான ஜீவநதிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இத்தொகுப்பாக்கத்திற்கு பண உதவி புரிந்த தம்பி திரு.தயாளன் தனுசன்(லெண்டன்) அவர்களுக்கும் மற்றும்...

– அலெக்ஸ் பரந்தாமன்

புதுக்குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைனவாகிய நினைவுகள்

இரவு நேரம் பன்னிரெண்டு மணிக்கு மேலாகி விட்டிருந்தது.

தலைக்குள் வலிப்பது போலவும் தூக்கம் வரமறுத்து, இதயத்தைத் துக்கம் அமுக்கிக் கொண்டிருப்பதுமான வேதனையிலும் அவன் இருந்தான். உடலையும் மீறி மனச் சோர்வானது அவன் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டு நின்றதனால், எதனையும் நிதானமாகச் சிந்திக்க முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கு முன்பு நடந்து விட்ட அகால அவல நிகழ்வானது அவனுள்ளே அச்சங்களையும் ஆழமான மனப் போராட்டங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

பாயை விரித்து அதில் படுப்பதற்கு ஆயத்தமான போதிலும், தூக்கம் அவனது கண்களைத் தழுவாமல் தூரத்தே நின்று வேடிக்கை பார்ப்பது போல இருந்தது. தரப்பாள் வீட்டுக்குள் தட்டுமுட்டுச் சாமான்களுக்கு அருகாக துயில் கொள்ளும் பந்த பாச உறவுகள் அவன் கண்களில் படுகின்றன.

'பதுங்கு குழியற்ற நிலையில் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலும் ஒரு 'ஷெல்' வந்து விழுந்தால்...?' அவனுக்கு அதை நினைக்க உடம்பு குளிர்ந்தே போய்விட்டது. தன் மனைவியைக் கட்டிப்பிடித்தபடி படுத்திருந்த தன் ஐந்து வயது மகளைப் பார்க்க அவனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

'இந்தக்குஞ்சுகள் எல்லாம் என்ன பாவம் செய்ததுகளோ..?'

அன்று மாலை ஐந்து முப்பது மணியளவில் நடந்து முடிந்து விட்ட, அந்த அவல நிகழ்வை மனதுக்குள் நினைத்துப் பார்க்க அவனுக்கு பயமாக இருந்தது. மாத்தளன் சந்தியை அண்டிய கப்பல் றோட்டில், ஒரு குடிசையில், நடக்க இயலாதவராக இருந்த அவனது மாமனார் மற்றும் அவரது மைத்துனர், மைத்துனரின் உறவுக்காரப் பெண் மூவரும் கருகிக்கிடந்த கோலம்... அதை அவன் தன் மனத் திரையிலிருந்து அகற்ற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

கிழக்குப்பக்கமாக உள்ள பரந்த கடலில் இருந்து எழும் அலைகளின் மெல்லிய ஓசைகளைத் தவிர, வேறெந்த அரவுமற்ற அந்த இராப்பொழுதில் அவன் யோசனையில் ஆழ்ந்து இருந்தான்.

கைவேலியில் ஒரு குடும்பமாக அனைவரும் இருந்த போது, காலை வேளைகளில் நித்திய கருமங்களைச் செய்வதற்கு அவனது மாமனார் படும்பாடு பெரும் பாடாகவேயிருக்கும். கால்களை நிலையாக நிலத்தில் ஊன்றி நடக்க முடியாதவராக... இருபக்கத்திலும் இருவர் தாங்கிப்பிடித்த நிலையிலேயே அவர் செயல்பட வேண்டியவராக இருந்தார்.

கைவேலிக் கிராமத்தில் முதன்முதலாக ஷெல்லொன்று வீழ்ந்து வெடித்தபோது, அவரை ஒரு முச்சக்கர வாகனத்தில் அவசரமாக ஏற்றிக் கொண்டு வந்து, மாத்தளன் கப்பல் றோட்டில் உள்ள அவர்களது உறவினர் ஒருவரது வீட்டில் தங்க வைத்தனர் அவருடைய பிள்ளைகள். கடல்தொழிலாளியான அவர், தன் வாழ்நாளின் முக்கால் பங்கினை கடலிலேயே செலவிட்டிருந்தாலும், கடுமையான உழைப்பின் நிமித்தமும் உடல் தளர்ந்து எண்பது அகவையைத் தாண்டிய நிலையிலும், முதுமை என்ற கட்டத்துக்குள் இயலாதவராக வாழ்ந்து கொண்டிருந்தார்.

உறவினரின் வீடானது கிணறு, மலசலகூட வசதிகளோடு அமைந்திருந்தாலும், வீட்டினுள்ளும் வளவினுள்ளும் இடப்பற்றாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை காரணமாக மனைவி, பிள்ளைகள் யாவரும் மாத்தளன் கடற்கரையை அண்டிய பகுதியில் தரப்பாள் வீடடித்து வசித்து வந்தனர். நூறு மீற்றர் வித்தியாசத்தில் வீடுகள் இருந்ததால் பிள்ளைகள் அடிக்கடி சென்று அவரது தேவைகளைக் கவனித்து வந்தனர்.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞன் மடத்தினில் ஷெல்கள் விழுந்து வெடித்து மக்கள் பலியாகிக் கொண்டிருப்பது அதிகரித்த வண்ணமிருக்க, மாமாவை எங்கு கொண்டு செல்வது..? எப்படிக் காப்பாற்றுவது என்பதில் குடும்பத்தவர்கள் எல்லோருமே குழப்பத்தில் இருந்தார்கள்.

"இயக்கத்திட்ட 'பாஸ்' எடுத்து கப்பலால புல்மோட்டைக்குக் கொண்டு போவோம்."

அவனது மனைவி தன் கருத்தைச் சொன்ன போது எல்லோரும் அதை ஆமோதித்து 'பாஸ்' எடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கினர். மூன்று, நான்கு நாட்களாக அலைக்கழிந்தும், காரியம் ஒப்பேறாததால் அவன் கடும் சினத்துக்குள்ளானான்.

"இவங்கள் என்ன காரணத்துக்காக 'பாஸ்' தரமாட்டம் என்கிறார்கள். இப்ப வயசான காலத்தில ஏலாமல் இருக்கிறவருக்கு 'பாஸ்' இல்லையெண்டால்...? அப்ப ஆருக்குப் 'பாஸ்' குடுக்கப் போறாங்களாம்?"

"நீங்கள் கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு சும்மா இருங்கோ..." பயத்தில் அவன் மனைவி அதட்டினாள்.

"நீ ஏன் பயப்படுகிறாய்..? நான் என்ன கொலையா களவா செய்து போட்டு நிற்கிறன்? இதில பயப்படுகிறதுக்கு என்ன இருக்கு?"

அவன் வெளிப்படையாக சற்று உரத்துக்கூறியதைக் கண்டு அவன் குடும்பத்தவர்கள் பயந்தே போய்விட்டார்கள்.

மேலும் சில நாட்கள் 'பாஸ்' எடுக்க ஓடியாடித்திரிந்தும், சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு கதைத்தும் பலனில்லாது போகவே, அவரவர் வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்து விட்டு, நடக்கிறது நடக்கட்டும் என அமைதியாக இருந்து விட்டனர்.

முள்ளிவாய்க்கால், வலைஞன் மடம் பகுதிகளில் பரவலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து வெடித்துக் கொண்டிருந்த ஷெல்கள், இப்போது மாத்தளன் பகுதியிலும் விழத் தொடங்கி விட்டன. மணலாற்றில் இருந்து முன்னேறிய இராணுவம் முல்லைத்தீவைப் பிடித்துக் கொண்டு, அங்கிருந்து ஏவும் ஷெல்களும், மாங்குளத்தில் இருந்து கிழக்கு நோக்கித் திரும்பிய இன்னொரு இராணுவ அணி ஒட்டு சுட்டான், கற்சிலைமடு மற்றும் மன்னாகண்டல் பகுதிகளையும் ஊடறுத்து, புதுக்குடியிருப்பு - ஐயனார் கோவிலடியில் நிலையெடுத் திருந்தபடி ஏவிய ஷெல்களுமே கடற்கரையை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடிக்கத் தொடங்கின.

இதன்பின்பு, இரண்டொரு நாட்களாக ஷெல்கள் வந்து விழுவது ஏனோ நடைபெறவில்லை. 'இவர்களும்' இராணுவத் தோடு முட்டவுமில்லை; மோதவுமில்லை. நிலவிய அமைதியான சூழ்நிலை குறித்து சனங்கள் ஆச்சரியப்பட்டதோடு, அச்சம் கொள்ளவும் செய்தனர்.

"ஆமி 'பண்ட்' அடிச்சு தன்னை பலப்படுத்துகின்றான் போல. அதுதான் ஓய்வாயிருக்கு."

"இவையள் விட்டிட்டு ஓடி வந்திட்டினம் போலக் கிடக்கு. அது தான் சத்தம் சாவடியைக் காணேல்லை."

சனங்களிடையே விமர்சனங்கள் பலதும் பத்துமாக கிளம்பத் தொடங்கின.

அன்று சங்கக்கடையில் கொடுக்கப்பட்ட ரேசன் சாமான் களை வாங்கிக் கொண்டு. அவன் வீடு திரும்பும் போது மதியத்துக்கு மேலாகிவிட்டது. தண்ணீர்த் தாகம் வேறு வாட்டிக் கொண்டிருந்தது அவனுக்கு. சங்கக்கடையில் கொடுக்கப்பட்ட அற்பசொற்ப சாமான்களை ஒரு உரப்பையினுள் திணித்து, அதைத் தலையிலே சுமந்து வந்த அவன், றோட்டு அருகோரம் மாமனார் தங்கியிருந்த குடிசை வீட்டினுள் சென்றான்.

கிடுகால் வேயப்பட்டிருந்த குளிர்ச்சி நிலவிய அந்தக் குடிசையினுள் ஒரு கட்டிலில் மாமா படுத்திருந்தார்.

"மாமா"

கண் விழித்துப் பார்த்த அவர், மிகவும் சிரமப்பட்டு எழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து கொண்டார்.

"எங்க இந்த வெயிலத்துக்குள்ளால...? துலையாலயே வாறியள்...?"

"சங்கக்கடையில நிவாரணச் சாமான் எடுத்துக் கொண்டு வாறன்..."

"உது எத்தனை நாளைக்குக் காணப்போகுது. தொழில் துறையளும் இல்லை. அவன் ஆமி வாறதைப் பார்த்தால் எல்லோரையும் புடிச்சிடுவாங்கள் போலக் கிடக்குது. புடிச்சு எல் லோரையும் சுட்டுவிட்டாங்கள் எண்டால் உபத்திரவமில்லை."

அவர் சலித்தபடி விரக்தியாகக் கூறிக்கொள்கிறார்.

அவன் எதுவும் கூறத்தோன்றாது அவரையே பார்த்தபடி இருந்தான். அவரது சலிப்புக்குக் காரணம் அவனுக்கு விளங்காமல் இல்லை. வாழ்வில் பெருமையோடு இருந்தவருக்கு போராட்டத்தின் வழித்தடம் திசை மாறியது கண்டு, அவர் மனதில் விரக்தியும் வெறுப்பும் குடிகொண்டு விட்டதை உணர்ந்து கொண்டான்.

"சாப்பாடு வந்திட்டுதே? சாப்பிட்டியளே...?"

அவன் அவரை விரக்தி மனநிலையில் இருந்து திசை திருப்புவதற்காக பேச்சைத் திசை மாற்றினான்.

"ஓமோம் இப்பத்தான் அவள் சின்னவள் கொண்டுவந்து தந்து சாப்பிட்டனான். நீங்கள் சாப்பிட்டியளே...?"

"இல்லை மாமா. இனிப் போய்த்தான் சாப்பிட வேணும். நான் போட்டுவாறன். வெளிக்கு ஏதும் போகப்போறியளே...? புடிச்சுக் கொண்டு போய் விடுகிறதே...?"

"வேண்டாம் நான் போயிட்டு வந்திட்டன்."

அவர் கூறிக்கொண்டே திரும்பவும் கட்டிலில் படுத்துக் கொண்டார். அவன் அவர் அணிந்திருந்த சாரத்தை ஒழுங்காய் சரிசெய்து, தலையணையை முதுகுப்பக்கம் அணையாக வைத்து விட்டு, தலைமாட்டில் இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து தண்ணீர் குடிக்கத் தொடங்கினான்.

"இவள் ராகினியை பின்னேரம் ஒருக்கா வரச்சொல்லி விடுங்கோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி மாமா...."

அவன் தண்ணீர்ப் போத்தலை தலைமாட்டில் வைத்து விட்டு, நிவாரணச் சாமான்களை எடுத்துக் கொண்டு, வளவுப் படலையை திறந்து றோட்டில் ஏறி நடக்கத் தொடங்கினான் அன்று மாலை ஒரு அனர்த்தம் நடக்கப்போவது தெரியாமல்.

மேற்குவான் நோக்கி சூரியன் மெல்ல மெல்ல சரிந்து கொண்டிருக்கையில், புவிப்பரப்பெங்கும் பரவியிருந்த வெப்பமும் மெல்லத்தளர்வடையத் தொடங்கியது. சனநெருக்கமாகிவிட்ட கப்பல்றோட்டில் இருமருங்கிலும் இருந்த சிறுசிறு கடைகளி லிருந்து வியாபாரக்குரல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. அடுத்து என்ன நிகழும்...? யாருடைய உடம்பு உயிரற்று விழும்... என்பது தெரியாத நிலையிலும், சனங்கள் வாழ்வாதாரத்துக்கான செயற் பாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

தரப்பாள் வீட்டினுள், மாலை ஐந்து மணிக்குத் தொடங்கும் வானொலிச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த அவனுக்கு சிரிப்பு வந்தது.

"என்னப்பா! உங்கடபாட்டுக்கு நீங்களே சிரிக்கிறியள்...?" அவனது மனைவி அவன் அருகில் வந்து நின்று கேட்டாள்.

"பயப்படாதை! எனக்கின்னும் லூசாக்கேல்லை. நாட்டு நடப்புக்களையும் நம்முடைய போராட்டத்தையும் நினைக்கச் சிரிப்பு வருகுது..." கூறி விட்டு அவன் மீண்டும் சிரித்தான்.

"இஞ்சருங்கோ! நாட்டு நடப்புக்கள் இப்ப மோசமாயிருக்கு, கண்டபடி கதைச்சு..."அவள் அவனை எச்சரித்துவிட்டு வெளியே சென்றாள்.

திடீரென அதிர்வொலியொன்றைக்கேட்டு, வெளியே போன அவனது மனைவி வீட்டுக்குள் ஓடி வர, அவன் செய்தி கேட்பதை நிறுத்தினான்.

"என்னப்பா பிறகு துவங்கியிட்டாங்கள் போலக் கிடக்குது..."

வெளியே சனங்கள் அசையவில்லை, மரணங்களைக் கண்டு, கண்டு மனங்கள் மரத்துப் போனதாலோ என்னவோ விறைச்ச கம்புகளாய் வெளியே உலாவிக்கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயக்கத்தின்ர எரிபொருள் குதமொன்று நெருப்புப் புடிச்சு எரியுதாம்."

பக்கத்துத் தரப்பாள் வீட்டிலிருந்து ஒலித்த குரல் கேட்டு, அவனும் அவன் மனைவியும் வெளியே வந்து பார்த்தார்கள். வானமெங்கும் ஒரே புகைமண்டலமாக இருந்தது. றோட்டில் சனங்கள் குழுக்களாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். மாத்தளன் சந்திப்பக்கமாக இருந்து எழும் புகைக் கூட்டத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தவனின் முகம் சட்டென இறுகியதை அவன் மனைவி கவனிக்கவில்லை.

"மாத்தளன் சந்தியில் இயக்கத்தின்ர 'பேஸ்' எதுவுமே இல்லையே. அதுவும் ஆமி வாற திசையை நோக்கி அவங்கள் எரிபொருள் ஒண்டையும் வைச்சிருக்க மாட்டாங்களே... அப்படி யானால் எரியிறது என்ன...?"

அவனுள் ஆயிரம் கேள்விகள் நெருப்புப்பொறிகளாய் வெடித்துச்சிதற, வேகமாக நடந்து சென்று கப்பல் றோட்டில் ஏறி, மாத்தளன் சந்தியை நோக்கி ஓடத்தொடங்கினான்.

"எங்கையப்பா ஓடுறியள்...? ஆமி திரும்பவும் ஷெல் குத்தப் போறான்..." மனைவியின் குரல் அவனைத்துரத்திய போதும் அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

சில விநாடிகளின் பின்...

ஓடிய அதே வேகத்தில் குளறியபடி திரும்பி ஓடி வந்தான் அவன்.

"ஐயோ எடி புள்ள... மாமா இருந்த கொட்டில் எரிஞ்சு சாம்பலாய்க் கிடக்கடி..." கூறிவிட்டு, அவன் திரும்பவும் எரிந்து கொண்டிருக்கும் இடம் நோக்கி ஓடத்தொடங்கினான். அவனுக்குப் பின்பாக அவனது குடும்பத்தவர்கள் ஒவ்வொருவரும் குளறியபடி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

மாமா இருந்த குடிசைக் கொட்டில் முற்றாக எரிந்து போய் விட்டிருந்தது. குந்திய வடிவத்தில் இரண்டு கைகளையும் மேலே தூக்கிய நிலையில், கட்டிலோடு எரிந்து சுடுசாம்பல்களுக்கு நடுவில் கருகிப் போய்க் கிடந்தார் மாமா. அவருக்குப் பக்கத்தில் ஒரு கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் தப்பிய நிலையில் மற்றைய பாகங்கள் எல்லாம் கருகிப் போய் மாமாவின் மைத்துனர் கிடந்தார். அவர்கள் இருவருக்கும் நடுவில் பெண்ணொருவர் அடையாளம் தெரியாத படிக்கு முகம்குப்புற அவலமாய்க் கிடந்தார்.

இனபந்துகளின் கூக்குரல்களும் கதறல்களும்... போரினுள் வாழ் மக்களுக்கு சாதாரணமாக இருந்ததால், அங்கு நின்றிருந்த எவரும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. உதவிக்கு வந்த சில ஆட்களோடு, கருகிய உடல்களைக் கயிற்றால் கட்டி வெளியே இழுத்து எடுத்து, பாய்களில் போட்டு பழந்துணிகளால் மூடினார்கள். பின்னர் 'கன்ரர்' வாகனமொன்றில் ஏற்றிக்கொண்டு போய் குழிவெட்டிப் புதைத்து விட்டு திரும்பி வருகையில் இரவு பன்னி ரெண்டு மணிக்கு மேலாகி விட்டிருந்தது.

"என்னப்பா இருந்த இரையில யோசித்துக் கொண்டிருக் கிறியள்...?"

படுக்கையில் இருந்து திரும்பிய போது தற்செயலாக அவன் இருந்த நிலை கண்டு, மனைவி வினாவினாள்.

"ஒண்டுமில்லை... நித்திரை வருகுதில்லை."

அவன் ஒரு ஒப்புதலுக்குக் கூறி விட்டு, கண்களை மூடிக் கொண்டான்.

உபத்திரவங்களில் இருந்து விடுபட நினைத்தவர், நெருப்பில் உபத்திரவப்பட்டே போய்ச் சேர்ந்திட்டாரே...?

அவன் உள்ளம் வேதனையில் வெம்பித் தகித்துக் கொள்கிறது.

"அவன் ஆமி வாறதைப்பார்த்தால் எல்லோரையும் புடிச்சிடு வாங்கள் போலக் கிடக்குது. புடிச்சு எல்லோரையும் சுட்டு விட்டாங்கள் எண்டால் உபத்திரவமில்லை"

அன்று மதியம் சங்கக்கடையால் வந்து அவருக்கு அருகில் இருந்த போது அவர் கூறிய அந்தக் கடைசி வார்த்தைகள்...

மீண்டும்... மீண்டும்... ஒலித்துக் கொண்டிருந்தன அவனது மனதுக்குள்.

ஞாயிறு தினக்குரல் : 28.2.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயுண்ணிகள்

முன்னிரவு எட்டு மணியிலிருந்து அதிகாலை நான்கு மணிவரை நடந்து கொண்டிருந்த சண்டை, மெல்ல மெல்ல தளர்வடையத் தொடங்கியிருந்தது. புதுக்குடியிருப்பு - கேப்பாபிலவுப் பக்கமாக ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கி வெடி ஓசைகள் பலவும் ஓய்ந்திருந்த நிலையில், உறக்கமற்று உடல்சோர்ந்தவளாய் படுத்திருந்தாள் தேவகி.

தொடர்ந்து பல நாட்களாக தூக்கமற்று இருந்ததினால், கண்கள் எரிவெடுத்துக் கொண்டிருந்தன. வயிற்றோட்டநோய் ஏற்பட்டு போதிய மருந்துகள் இல்லாத காரணத்தினால், வெந்தயம் மற்றும் கோப்பிநீர் ஆகியவற்றைப் பாவித்ததில், நோய் சற்று குறைவடைந்திருந்தது அவளுக்கு. ஆயினும், அதற்குப் போதிய ஆகாரங்கள் உட்கொள்ளாததையிட்டு உடல்பலவீனப்பட்டுப் போயிருந்தது.

மாத்தளன் கடற்கரையை அண்டிய பகுதியொன்றில் நிரந்தரவாசியான ஒரு கடல் தொழிலாளியின் குடிசைவீட்டுத் தாழ்வாரத் தோடு, முகடு விரித்த தரப்பாளுள் எந்தவித பாதுகாப்புமற்றநிலையில், தன்னிரு பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளோடு இருந்தாள் தேவகி.

"கடவுளே! இந்தச்சண்டை எப்ப முடிஞ்சு நாங்கள் வீட்டை போய் நிம்மதியாய் இருக்கப் போறமோ...?"

தூக்கம் வராத கணங்களில் இப்படித்தான் அவள் மனம் சிந்தனை கொள்ளும்.

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியிலுள்ள தனது வீட்டி லிருந்து வெளிக்கிட்ட நாள் முதல், இன்றுவரை அவளுள் ஆயிரம் மனப்போராட்டங்கள்...

கணவன் அவளை விட்டு விலகி, வேறொரு பெண்ணைத் திருமணம் முடித்துக்கொண்டு போய்விட்ட நிலையில், அவள் தன் பிள்ளைகளை வளர்க்கப்பட்ட பாடு கொஞ்சம் நஞ்சமல்ல.

வாழ்ந்து காட்டுகிறேன்! காட்டுவேன்... என்ற மனவைராக் கியத்தோடு, வீடுகளுக்குச் சென்று மா மற்றும் தூள் இடித்துக் கொடுப்பது தொடக்கம் வீட்டில் ஆடுகள், கோழிகள் மற்றும் வாத்துக்கள் வளர்ப்பது வரையில்... எவருக்கும் அடிமைப்படாத வாழ்வாக தன்மானத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தவளுக்கு, வன்னி மீதான போர் நடவடிக்கைகள் அவளுக்குப் புதிய பல அனுபவங்களை கொடுத்துக் கொண்டிருந்தன.

கடற்கரையை அண்டிய கப்பல் றோட்டில் டோர்ச் வெளிச் சங்கள் அதிகரிக்கத் தொடங்கியிருந்ததை அவதானித்துக் கொண்டாள் தேவகி. கடற்கரைக்குச் சென்று மலசலம் கழிக்க வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்ட போதும், அதற்கான உபாதை அவளிடமிருந்து எழவில்லை. ஒரு வாரமாக வயிற்றுக்கு ஒழுங் காகச் சாப்பாடு போடாததால், குடல்கள் சுருங்கி நோவெடுப்பதில் இருந்து அதன் தாக்கத்தைப் பலவீனத்தைப் புரிந்து கொண்டாள்.

அவளுக்கு அழவேண்டும் போல இருந்தது. ஆனால், அழுகை வரவில்லை. கண்ணீரும் ஊற்றெடுக்கவில்லை. வெம்பி நசிந்தவொரு பழத்தின் நிலையாக அவளது மனம் உருகிக் கொண்டிருந்தது. எங்கும் மூலைக்கு மூலை சாவீடுகளே உதயம் பெற்றுக்கொண்டிருந்ததால், யாரும் யாருக்கா அழவேண்டியதேவை இல்லாமல் போய்விட்டது. அவரவர்களே அவர்களின் இழப்புக்காய் அழவேண்டியதோடு, அதுவும் எந்தவொரு ஆர்ப்பாட்டமில்லாத அழுகையாகத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தது.

தேவகி அழவில்லை, வெறும் மணல் தரையில் பழைய சீலையொன்றின் மேல் படுத்திருந்தாள். பக்கத்தில் உயரம் குறைந்த ஒரு தென்னைமரத்தின் அருகோடு சவக்குழி அமைப்பில் தோண்டப் பட்டிருந்த கிடங்கினில், பிள்ளைகள் இருவரும் தாயின் சேலை யொன்றினால் போர்த்து மூடியபடி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

கிடங்கிற்கு மேலே படுத்திருந்த தேவகி தலையைச்சற்று தூக்கிப் பிள்ளைகளைப் பார்த்தாள். பெத்தவயிறு பற்றி எரிவது அவளுக்குத் தெரிந்தது. கடற்கரையிலிருந்து வீசும் குளிர்காற்றையே அனலாக்கும் விதத்தில் அவளிடமிருந்து வெளிக்கிளம்பியது ஆழமான தொரு பெருமூச்சு.

கோம்பாவிலில் இருந்து இடம்பெயரும்போது இரண்டு மாதத்துக்குத் தேவையான உணவுப்பொருட்களோடுதான் அவள் வெளிக்கிட்டாள். நெருங்கிய உறவுகள் என்று சொல்வதற்கு அவளுக்கு யாருமில்லை. தனது விருப்பப்படியே திருமணம் செய்து கொண்டதால், அவளது கணவனைச் சாதிகுறைந்தவன் என்ற கருத்தைக் காரணம் காட்டி, அவளை ஒதுக்கியே விட்டிருந்தார்கள் அவளின் சகோதரர்கள்.

இந்தநிலையில், கணவன் விலகிப்போனதும் தனித்துப் போனவளாய் தேவகி தவித்தே போனாள். காலவோட்டத்தில் தனிமையைச்சுமந்து வறுமையை எதிர்த்து வாழ்ந்து கொண்டிருந்தவ ளுக்கு, விடுதலைப்போராட்டம் சார்ந்த செயற்பாடுகளில் அவளுக்கு விருப்பம் இல்லாதிருந்தபோதும், மூத்தமகள் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்து 'கடற்கரும்புலி'யாகிப்போன பின், இன்னும் இவள் தனிமைப்பட்டே போனாள் என்பதைவிட, அவள் தனிமையை நாடினாள் என்றே கூறலாம்.

உறவினர்களின் புறக்கணிப்பு... மகளைப்பிரிந்த கவலை... எஞ்சிய இரு பெண்பிள்ளைகளின் எதிர்காலம்... பொருளாதாரப் பிரச்சினை போன்ற பல விடயங்கள் அவளுக்கு சிக்கல் மிகுந்ததாக இருந்ததால், எதிலும் பற்றற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த வளுக்கு, தூரத்து உறவுமுறையான ஒருத்தி, விசுவமடுவில் இருந்து இடம்பெயர்ந்து, இருக்க இடமில்லாது மாத்தளனில் அந்தரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, தேவகி மனமிரங்கி தனது தரப்பாள் கொட்டிலுள் தங்குவதற்கு அனுமதித்தாள்.

ஆரம்ப நிலையில் தேவகியிடம் சாப்பாட்டுக்குத்தேவையான அடிப்படைச்சாமான்கள் இருந்த போதிலும், கைச்செலவுக்குப் பணம் இருக்கவில்லை. காதுத்தோட்டை பவுண்விற்கும் விலைக்கு அரைப் பங்கிற்கும் குறைவாக ஒருவரிடம் விற்றுவிட்டு, அந்தச்சொற்பப் பணத்தைக்கொண்டு சமாளித்து வந்தாள்.

தூரத்து உறவுமுறையாய் வந்தவள் இவளிடம் சாப்பாட்டுக்குத் தேவையான சாமான்கள் இருப்பதைக் கண்டு விட்டு தேவகியிடம் கேட்டாள்.

“தேவகி அக்கா! நாங்கள் ஒண்டாய்ச்சமைச்சுச் சாப்பிடுவமே? விறகுச்செலவு மிச்சம். கறி, புளிகளை நான் வேண்டித்தாறன், நீங்கள் அரிசி சாமான்களை வேண்டிப் போடுங்கோவன்...”

தேவகிக்கு அப்போதைய நிலையில் அது இலகுவானதாக மனசுக்குப்பட்டது. மரண பயத்தை நித்தம் சுமந்து கொண்டிருந்த நிலையில், சமையல் வேலைகளைப்பகிர்ந்து, ஒன்றாகச் சாப்பிட்டு, ஒற்றுமையாக இருந்தால் உறவுநிலை மேம்படையும் என அவள் நினைத்தாள்.

ஆரம்பத்தில் எல்லாமே சுமுகமாய்போய்க்கொண்டிருந்த உறவுநிலை, தேவகியின் உணவுப்பொருட்கள் குறைவடைய சற்று விரிசல் கொள்ளத்தொடங்கியது. கறி, புளி வேண்டித்தாறன்... என்று கூறிய உறவுக்காரப்பெண் நாளடைவில் அவற்றை வாங்குவதை மெல்ல மெல்ல குறைத்துக்கொண்டே தேவகியின் செலவு சித்தானத்தில் சாப்பிடத்தொடங்கினாள். தேவகியோடு குடும்பத்தில் மூன்று அங்கத் தவர்களாக இருந்தவர்கள் உறவுக்காரப் பெண்மணி வந்ததோடு, அங்கத்தவர் தொகை ஆறாக அதிகரித்துக் கொண்டது. நாள் ஒன்றுக்கு ஒன்றரைக்கிலோ அரிசி தேவைப்பட்ட நிலையில், பொருளாதாரத் தடைக்குள்ளும் மீன் கறிக்கு குறைவில்லாமல் இருந்தது.

தேவகியின் கையிலுள்ள பணம் இருப்புக் குறைந்தவுடன், மீன் வாங்குவதும் நின்று போயிற்று. தேவகி நிலைமையை விளங்கப்படுத்த முடியாத, தாழ்வுச்சிக்கலில் பெருந் தவிப்புக்குள்ளாகியிருந்தாள். அந்தரிச்சு வந்தவள்... என்ற மனப்பான்மையில் அவர்கள் இருப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் கொடுத்துவிட்டு, நிலைமையைக் கதைக்கப்போய் பிரச்சினை சிக்கலாகிவிட்டால், கணவன் வழியில் உள்ள உறவுகள் மத்தியில் தன்னைப்பற்றியதான கணிப்பீடு மேலும் தவறாகிப் போகுமென அவள் பயந்தேபோயிருந்தாள். உறவுக்காரப் பெண்மணியும் சுயஅறிவற்ற பெண்ணாக, தான்தோன்றிதனமாகவே நடந்து கொண்டாள்.

வயதுக்கு வந்த இரண்டு குமர்ப்பிள்ளைகளை வைத்துக் கொண்டு 'பிள்ளை பிடிகாரரிடமிருந்து' தப்புவதற்கு பெரும் பிரயத் தனப் பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், இதுவேறு வில்லங்கமான பிரச்சினை யாக உருவெடுத்து நிற்பதை தேவகி உணர்ந்து கொண்டாள். பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய நிலையாய்ப்போனது அவளுக்கு.

ஒரு நாள் காலைவேளை ஷெல் வீச்சுக்கள் சரமாரியாக நடை பெற்ற போது, தேவகியின் இரண்டு பிள்ளைகளும் கிடங்கைவிட்டு வெளியே வரவில்லை. அவர்களுடன் சேர்ந்து உறவுக்காரப்பெண்ணின் சிறு பிள்ளைகள் இரண்டும் கிடங்கிற்குள் இருந்தன. பொழுது மதியத்தை தாண்டிவிட்ட பிற்பாடும், தேவகி தனது அடுப்பை மூட்டவில்லை. உறவுக்காரப் பெண்மணி பக்கத்தில் வேறொருவருடைய தரப்பாள் வீட்டில் மண் அணைகளுக்கு நடுவே வீட்டுக்காரருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தாள்.

நேரம் நகர்ந்து கொண்டிருக்க, சிறுபிள்ளைகள் இரண்டிற்கும் பசி வயிற்றைக் குடையத்தொடங்கியது. அவர்கள் அழ ஆரம்பித்தனர். குழந்தைகளின் அழுகுரல் கேட்டு வந்த அவள், தரப்பாள் கொட்டிலின் வெளியேயுள்ள அடுப்பில் எதுவுமே இல்லாததைக்கண்டு தேவகியைக் கேட்டாள்.

"ஏன் தேவகியக்கா சமைக்கேல்லையே...?"

தேவகி பதில் ஒன்றும் கூறாமல் படுக்கையில் நித்திரை போல் இருந்தாள்.

"தேவகியக்கா... தேவகியக்கா..."

உறவுக்காரப்பெண், தான்நின்ற நிலையில் தனது வலது காலால் தேவகியின் காலைத்தட்டியபடி கூப்பிட்டாள்.

தேவகிக்கு அழுகையும், ஆத்திரமும் வந்தது.

"என்ன பிள்ளை...?" வெடுக்கெனக்கேட்டாள் தேவகி.

"ஏன் இன்டைக்கொண்டும் சமைக்கேல்லையே...?" அவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலில் அதட்டல் தெரிந்தது.

"இல்லை..."

"ஏன்...?"

"என்ன கிடக்குது சமைக்கிறதுக்கு...?"

தேவகியின் குரல் வெறுப்பாய் ஒலித்தது.

"ஒண்டும் இல்லையெண்டா நேரத்தோட சொல்லியிருக் கலாம் தானே...?"

"ஏன் உனக்குத் தெரியாதா...? ஒரு வீட்டுக்குள்ள ஒரு பானையில சோறு காய்ச்சிச் சாப்பிடுகிறாய். இருக்கிறது இல்லாதது தெரிய வேணும் தானே." தேவகி மறைமுகமாகத் தன் நிலையை வெளிக் காட்டினாள்.

"இஞ்சருங்கோ...! இருக்கிறது இல்லாதது பார்க்கிறதுக்கு நான் ஒவ்வொன்றாக எல்லாத்தையும் திறந்து பார்த்துக்கொண்டிருக்க ஏலாது. நான் உங்களோடை இருக்கிறது விருப்பமில்லை எண்டால் சொல்லுங்கோ வேற இடம் பார்த்துப்போறன்."

உறவுக்காரப்பெண் சற்று உரத்த தொனியில் முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டு, கிடங்குக்குள் கிடந்த தன்பிள்ளைகளை வெளியேதூக்கி எடுத்தாள். தனது தட்டுமுட்டுச்சாமான்களை ஒரு உரப்பையினுள் போட்டு கட்டியபின், பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பக்கத்து தரப்பாள் வீட்டினுள் போய்ச் சேர்ந்தாள்.

தேவகிக்கு ஒரு கண்டத்திலிருந்து விடுதலை அடைந்துவிட்ட உணர்வு ஏற்பட்டதாயினும், இருக்கும்வரை எல்லாவற்றையும் 'உறிஞ்சி' எடுத்தபின், தன்னை வெறுமை நிலைக்குக் கொண்டுவந்து விட்டுச்சென்றதை நினைக்க வேதனையாக இருந்தது. இரண்டு மாதத்துக்குத் தேவையான பொருட்கள் இருபத்தாறு நாட்களில் கரைந்தொழிந்து போய்விட்டதை உணர்ந்து கொண்டாள். தன்னிடம் இனி எதுவுமில்லை என்பதைத் தெரிந்து கொண்ட அவள், பிரச்சினையை உருவாக்கிக் கொண்டு, செத்த நாயிலிருந்து உண்ணி கழருவது போல... போய்விட்டாளென தேவகிக்கு விளங்கிக்கொண்டது.

"போய்த் தொலையட்டும் சனியன்..." மனஆற்றாமை தாங்காது வாய்விட்டுத் திட்டித்தீர்த்தாள் தேவகி.

கடலில் இருந்து குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்பரப்பில் மெலிதான வெளிச்சக்கீற்றுக்கள் தோன்ற ஆரம்பித்தன. கப்பல் றோட்டில் ஆள் நடமாட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கி யிருந்தன. கரையை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடி வள்ளங்கள் தொழிலுக்காகச் சென்று கொண்டிருந்தன.

"இன்றைய பொழுது என்ன மாதிரிப் போகப்போகுதோ... கடவுளே?"

தேவகி படுக்கையிலிருந்தபடி சிந்திக்கத்தொடங்கினாள். நோயாலும், பசியாலும் தளர்ந்து போயிருந்த அவளது உடல், கடலில் இருந்து வீசும் குளிர்காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் நடுங்கத்தொடங்கியது. பாயில் இருந்த சேலையை எடுத்து உடலைப் போர்த்து மூடிவிட்டு, விடியும் பொழுதை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தாள்

உறவுக்காரப்பெண்மணி அவளை விட்டுப் போய் வாரங்கள் மூன்று ஆகிவிட்டிருந்தன. அவள்போய் தஞ்சமடைந்த பக்கத்து வீட்டில் வேளா வேளைக்கு சமையல் நடந்து முடிவதைத் தேவகி கண்டு கொண்ட போதிலும், அவள் எதுவும் கதைக்கவில்லை. தானும் தன்பாடுமாக இருந்தாள்.

திடீரென அந்தவீட்டில் சருவப்பானைகள் உருண்டு விழும் சத்தம் கேட்டு தேவகி படுக்கையை விட்டு எழுந்திருந்தாள்.

"எடியேய்! இப்பவே மரியாதையாய் எழும்பிப் போயிடு. இல்லாட்டால் தேயிலையை நீ களவெடுத்ததை காவல்துறைக்குப் போய்ச் சொல்லி உன்ர மானத்தை வாங்கிப்போடுவேன். பாவம்! தங்கியிருந்துவிட்டுப் போகட்டுமெண்டு விட்டால் உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்யிறியேடி நாயே..."

பக்கத்து தரப்பாள் வீட்டுக்காரி, உறவுப்பெண்ணுக்கு எச்சரிக்கை விடுவது கேட்டு தேவகி தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

மீண்டும்...

ஷெல்வீச்சுகளுக்கு மத்தியில் தட்டுமுட்டுச்சாமான்கள் சகிதம் இரண்டு பிள்ளைகளோடு இடப்பெயர்வுக்குள் இடம்பெயர்ந்து போவதை தரப்பாள் கொட்டிலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் தேவகி.

சுடர்ஒளி வாரமலர் : 4.4.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூனியங்கள்

அவளுக்கு வாழ்வின் மீது வெறுப்பு வந்த போதிலும், அதிலிருந்து விலகிக் கொள்ள முடியவில்லை. ஒவ்வொருவருக்குமான விதி வகுத்த பாதை வெவ்வேறானவை என்பதைக் கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட சில அனுபவங்களூடாகத் தெரிந்து கொண்டாலும், தற்போது ஒரு மாதம் வரையிலான வாழ்வினுள், அவள் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள்... அவலங்கள்... துயரங்கள்...

'சே... இதைவிட தடுப்பு முகாமிலேயே செத்திருக்கலாம்...'

அடிக்கடி இந்த எண்ணங்கள் அவளுள் தலைதூக்கும் போதெல்லாம் களத்தில் அடிபாடு நிகழும் நேரங்களில், உயிர்விட வேண்டிய சந்தர்ப்பங்கள் அவளுக்கு நினைவினில் வரும். ஆயினும், மதியூகத்துடன் சாதுரியமாகத் தப்பிக்கொண்டது பெரும் தவறென்பதை விளங்கிக்கொண்டாள் இப்போது அவள்.

எந்த மண்ணில் வாழும் மக்களுக்கு மீட்சி பெற்றுக்கொடுக்கவென்று புறப்பட்டாளோ, அதே மண்ணில் உள்ள மக்களே அவளை இன்று சந்தேகத்தோடும், அருவருப்போடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரத்தோடும் பார்ப்பதை அவளால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

கண்களில் இருந்து வழியும் நீரைத்துடைத்தபடி... தனது வீட்டுத்திண்ணையில் இருந்தவாறே அண்மையில் தெரியும் தோட்டத்தினுள் செழித்து நிற்கும் வாழைமரங்கள், மரக்கறிச் செடிகளை வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

உச்சிப்பொழுது சரிந்து வெப்பம் சற்று உறக்கம் கொள்ள ஆரம்பிக்கும் அந்த நேரத்தில், பரந்த தோட்டவெளியில் இருந்து வீசுகின்ற காற்றின் இதமும், வானில் பறந்து செல்லும் சிறுகுருவிகளின் பேச்சொலியும் மனதுக்கு இதமளிப்பதாக இருக்கவில்லை அவளுக்கு.

மாறாக, "ஏன் இப்படியாய்ப் போனது எங்கள் வாழ்க்கையும் போராட்டமும்..." என்ற எண்ணங்களே அவளுள் மேலெழுந்து கொண்டன.

அவளால் அதை நினைத்துப்பார்க்க முடியவில்லை. போராட்டம் மீதான பற்றுதலோடும், விசுவாசத்தோடும் உழைத்தவள் அவள். திருமண பந்தமென்ற உறவுகளுக்கு அப்பால் விடுதலை உணர்வோடு இரண்டறக்கலந்தவளாக இரவு - பகலாகப் போராடிய வளுக்கு, அந்தப் போராட்டப் பாதையானது சடுதியாக திசை திரும்பிப் போனதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'எங்கேயோ பிழை நடந்திட்டுது...' என்பது மட்டும் அவளுக்கு துல்லியமாகப் புரிந்து கொண்டது.

வாழைத்தோட்டத்தின் நடுவிலிருந்த மாட்டுக் குடிலில் இருந்து பசுக்கன்று ஒன்று இருதடவை கத்திக்கொண்டதும், அவளது நினைவுகள் சிதறி... மீண்டும் அந்தக்கன்றின் ம்... மா... என்ற குரலோடு பழைய நிலைக்குத் தாவுகின்றன.

"அம்மா...அம்மா... என்னைக் காப்பாற்றம்மா... அம்மா... என்னை அடிபாட்டுக்கு பிடிச்சுக்கொண்டு போறாங்கள் அம்மா... ஐயோ அம்மா... ஐயோ... என்னைப் பிடியுங்கோம்மா..."

அவளால் மேற்கொண்டு அந்த நினைவுகளை ஜீரணிக்க முடியவில்லை. கண்களில் இருந்து பொலுபொலுவென உதிர்ந்து விழும் கண்ணீர்த்துளிகளோடு திண்ணையை விட்டெழுந்து, வாழைத்தோட்டத்தினுள் சென்று, அந்தப்பசுக்கன்றின் மேனியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஞ்சையோடு தடவிக்கொள்கிறாள். கன்று அமைதியாக அவளது முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

கன்றின் மிருதுவான உடலைத் தடவுவதில் ஒருவித சுகம் தெரிந்தது அவளுக்கு. வாழைத் தோட்டத்துக்கு அடுத்த நிலப்பரப்பில் வளர்ந்து நின்ற மிளகாய்ச்செடிகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக ஒருவர் நீரிறைக்கும் இயந்திரத்தை கிணற்றுக்கு அருகில் நின்றவாறு இயக்கிக் கொண்டிருந்தார்.

தோட்ட வெளிப்பரப்பினில் ஆங்காங்கே பல கமக்காரர்கள் தங்கள் நிலங்களில் பிரயாசைப்பட்ட வண்ணம் இருந்தார்கள். அவளுக்கு அதைப்பார்க்கப் பெருமையாக இருந்தது. 'எங்கள் மண்ணின் உழைப்பாளிகள்...' என்ற எண்ணம் அவளுள் எழ, அவள் திரும்பவும் அவர்களை மாறிமாறிப் பார்த்த வண்ணம் அந்த வாழைத் தோட்டத்தின் நடுவில் உள்ள மாட்டுக் குடிலினுள் பசுக்கன்றோடு அமர்ந்திருந்தாள்.

"பிள்ளை... தங்கச்சி..."

குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறாள் அவள்.

வீட்டுத்திண்ணையின் வாயிலில் நின்றபடி... அவளது தாயார் கூப்பிடுவது தெரிந்தது.

"என்னம்மா...?"

"ஒண்டுமில்லை... காணேல்லையெண்டு கூப்பிட்டனான்..."

தாய் கூறிவிட்டு குடிசையினுள் சென்று மறைந்து கொள்கிறாள்.

அவளுக்கு மனதுள் சிரிப்பு எழுந்து கொண்டது. பத்துவருட இயக்கவாழ்க்கையில் அவள் எப்போதாவது இருந்து விட்டு, ஆயுதம் சகிதம் ஒரு போர் வீராங்கனையாக தாயிடம் வருவாள். அப்போ தெல்லாம் தடல்புடலான வரவேற்பாக இருக்கும். அக்கம் பக்க மெல்லாம் ஒன்றுகூடி அவளை ஒரு புதுவிதமான பெண்ணாகப் பார்க்கும். அதைப்பார்க்க அவளது தாயின் மனம் பெருமைப்படும்! பூரித்துக்கொள்ளும்.

இன்று அந்தப் பெருமையெல்லாம் சிறுமைப்பட்ட நிலையில், தாய்க்கு ஒரு பாரமாகத், தான் இருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிகிறது. தாய் இருக்கும் வரைக்கும் ஏதோ ஆறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும். தாய் இல்லாத காலத்தில்...?

அவள் அதை அடிக்கடி நினைத்துக்கொள்ளும் போதில் முள்ளிவாய்க்காலில் இராணுவத்திடம் சரணடைந்ததை விட, குப்பி கடித்திருக்கலாம் போல் தோன்றும். போராட்டத்தின் இலக்கானது தடம்மாறிய பிற்பாடும், அதன் தலைமைத்துவம் சிதைந்த பின்பும் குப்பி கடித்து இறப்பது, வீணான கொள்கை என்ற எண்ணங்கள் அவள் மனதில் எழுவதுண்டு.

இமயமாய் எழுந்து நின்ற 'இயக்கப்போராளி' என்ற சொல் இன்று இறங்கு நிலையாகிப்போனதுக்குக் காரணம், வன்னியில் இறுதிக்கட்டப்போரின் போது நிகழ்ந்த 'பிள்ளைபிடிப்பு' நிகழ்வுகளே பிரதானமாக இருந்ததென்பதை அவள் உணர்ந்து கொண்ட போதிலும், அந்த அநாகரிகமான... அராஜகமான செயற்பாடுகளை அவள் ஆதரித்து நின்றதில்லை.

அடிபாட்டுக்களத்தில் மிகவும் ஆக்ரோஷமாக போராடிக் கொண்டிருந்த நிலையில், மக்களின் ஆதரவு குறைந்து போனதால் அவளைப்போன்ற பலர், தாக்குப்பிடிக்க முடியாமல் தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. குறிப்பிட்ட காலம் தடுப்பில் இருந்து விட்டு, அவள் தாயிடம் வந்த போது அவளது தந்தையார் இறந்து போய் விட்டிருந்தார். சகோதரங்கள் குடும்ப பந்தத்திற்குள் நுழைந்து விட்டிருந்தனர்.

அவள் இயக்கத்திலிருந்து வந்தவளாகையால், இராணுவம் தங்களையும் கண்காணிக்கக்கூடும் என்ற பயத்தில், அவளது உறவுகள் அனைத்தும் அவளை அந்நியப்படுத்தி வைத்திருந்ததை அவளால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது.

சில நாட்களுக்கு முன்பு நடந்து விட்ட அந்த நிகழ்வினை நினைக்க... மனதுள் வலி எடுத்தது அவளுக்கு. தந்தையின் தூரத்து உறவுமுறையான ஒருவரது மகளின் பூப்புனித நீராட்டுவிழாவுக்குச் சென்றிருந்த போது... அங்குள்ளவர்கள் அவளோடு நடந்து கொண்ட விதமும்... அங்கே எதிரொலித்த வார்த்தைகளும்...

ஒரு காலத்தில் தன்னை ஒரு புதுமைப்பெண்ணாக புதினம் பார்த்த இந்தச் சமூகம், இன்று ஏளனமாய் அற்பபுழுவாய் பார்க்கத் தலைப்படுவது கண்டு, அவளுக்கு அழுது குளறவேண்டும் போலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினாலும், தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்வாள்.

"உவ வன்னியில இயக்கத்தில இருந்தவவாம்...?"

"ஓமோம்..."

"இரவில வீடுவீடாகப்போய் ஆட்களைப் புடிச்சவையாம்...?"

"ஓமோம் கேள்விப்பட்டனான்."

"வெளிக்கிட்ட சனத்தையும் ஆமியிட்ட போக விடாமல் சுட்டுச் சாக்காட்டினவையாம்...?"

"அதில உவவும் ஒராளோ தெரியாது..."

ஐயுறவு உணர்வோடு அவளை நோக்குபவர்களிடமிருந்து எழும் எள்ளலும் எரிச்சலுமான விமர்சனங்களிலிருந்து அவளால் விலகியொதுங்க முடியவில்லை.

ஏனெனில், அவள் விடுதலை எனும் போராட்டத்திலிருந்து நீங்கி, தற்போது வாழ்வெனும் நீரோட்டத்தில் வலம் வர வேண்டி இருந்தது.

ஒருகுடம் பாலுக்கு, ஒரு துளி நஞ்சே போதுமான தொன்றாகிப் போன நிலையில், ஊர்முகத்தின் சந்தேகக்கண்களின் பார்வையிலிருந்து அவளால் விலகியிருக்க முடியவில்லை.

விழும் கண்ணீர்த்துளிகளைப் புறங்கையால் துடைத்தபடி... எதிர்காலமற்ற சூனியத்தை வெறித்துப்பார்த்த படி... அவள் இன்னமும் காத்திருக்கிறாள் தனக்கொரு விடியலுக்காக.

மீண்டும் –

அவளருகில் நிற்கும் பசுக்கன்று ம்...மா... எனக்குரலெடுத்துக் கத்துகிறது.

தினமுரசு வாரமலர் : 7.4.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதாமௌனம் கலைகிறது

நீண்ட நாட்களின் பின்பு எனது நண்பரைச் சந்திக்கச் செல்கிறேன். நான்காம் வட்டாரத்தில் அமைந்திருந்தது அவரது வீடு. பிரதான பரந்தன் சாலை வழியாகப் போய்க் கொண்டிருந்த என் மிதிவண்டி, வடக்கே திரும்பும் சேறும் சகதியுமான ஒழுங்கையினுள் செல்கிறது. பக்கத்தே ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் பாழடைந்து போய்க்கிடப்பது தெரி கின்றது. கிடுகால் வேயப்பட்ட வசந்தமண்டப முன்கொட்டகை அழிவோடு அழிவாக சிதைந் திருந்தது. கூரையைத்தாங்கிய சீமெந்துத்தூண் ஒன்று உடைந்து விழுந்த நிலையில், மணிக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த காண்டா மணியும் களவு போயிருந்தது.

இரண்டரை வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த யுத்த அழிவின் தரிசனங்களை விழிகள் உள்வாங்கிக்கொண்டிருக்க... மிதிவண்டி இப்போது இடப்பக்கம் திரும்பி கிரவல் பாதை யில் ஓடிக்கொண்டிருந்தது.

கைவேலியில் இருந்து முள்ளிவாய்க் கால் முடிபுவரை அனுபவித்த மரண வலிகள்... இப்பொழுது என்னுள் வலிப்பதாக உணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றேன். நான் மட்டுமா? இறந்தவர் இறந்து போக, உயிர்தப்பியோர், இன்றுவரை அந்த வலியைச்சுமந்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களில் என்நண்பரும் நிச்சயமாக வலிகள் தாங்கியவராய்... வாழ்க்கையோடு எல்லோரையும் போலவே போராடிக் கொண்டிருப்பார்.

சிந்தனை பலவாய் என்னுள் விரிகிறது... பாண்டியன் சந்திக்கு அருகாமையிலுள்ள ஒரு திருப்பத்தினூடாக எனது மிதிவண்டி செல்கிறது. அவ்விடத்தில் மீளக்குடியேறியோர் தங்கள் வளவுகளைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

பற்றைகள் வளர்ந்து குப்பைகள் நிறைந்து பலதுமாய் குவிந்து கிடந்த வளவுகளை அவர்கள் மிகவும் சிரமப்பட்டு சீர் செய்வது தெரிகிறது. பற்றைகளுக்கு நடுவில் வெடிக்காத வெடிகுண்டுகளும் இருக்கக்கூடும்?! நானும் மீள்குடியேற்றமாய் வந்து, எனது வளவினைத் துப்புரவாக்கும் பொழுது பெயர் தெரியாத பல வடிவங் களையுடைய ஆறு வெடிபொருட்கள் கிடப்பதைக்கண்டு, அவற்றை கண்ணிவெடிய கற்றும்பிரிவினர் மூலம் அப்புறப்படுத்தியது நினைவுக்கு வருகிறது.

மழை ஓய்ந்த பின்பும் தூறல் நிற்காதது போன்று உயிர்ப்பலிகள் இன்னமும் முடிந்தபாடாயில்லை. போரின் போது உயிர் உறுஞ்சிய குண்டுகள் இப்போதும் மண்ணுள் புதைந்த நிலையில்... யாரோ ஒருவரின் உயிர் குடிப்பிற்காய் காத்திருப்பது போல...

மிதிவண்டியின் மிதிகட்டைகளை மிதித்ததில் என் கால்கள் உளைவெடுக்கின்றன. முதுகெங்கும் சற்று வேர்த்து வியர்வை வடிகிறது. மூச்சு இழுத்துவிட சிரமமாக இருக்கிறது. போருக்குப்பின் நான், மிகவும் பலவீனப்பட்டுப்போயிருப்பது தெரிகிறது.

முன்பு என்றால்...? அதை நினைக்க கவலை கொள்கிறது மனம்.

நண்பர் எப்படியிருப்பார்...? அவரது குடும்பம் எப்படியுள்ளது...? அம்பலவன் பொக்கணையில் அவரது மாமனார் திடீரென இறந்து விட்டதாக அறிந்த செய்தியைத் தவிர, அவரைப்பற்றியதான எந்தத் தகவல்களும் எனக்குத் தெரியவரவில்லை இதுவரை.

ஒழுங்கையெங்கும் குவிந்துகிடந்த மரச்சருகுகளை மிதித்தபடி போய்க்கொண்டிருந்த எனது மிதிவண்டி, ஒருவளைவில் திரும்புகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தான் என் உணர்வு விழித்துக்கொண்டது.

'அட! பாதை மாறி வந்திட்டன் போலக்கிடக்குது...' என்று எனக்குள் நினைத்தபடி... அவ்விடத்தில் நின்று சுற்றும்முற்றும் பார்க்கிறேன். பாதை மாறவில்லை! எனது பார்வை தவறியதை உணர்கிறேன். நான் நிற்கும் இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் நண்பரின் வீடு இருந்தது. முன்பெல்லாம் இந்த ஒழுங்கையூடாக நான் அடிக்கடி போய் வருவதுண்டு.

ஆனால் இன்று...?

குண்டுகள் துப்பிய எச்சிலால் வீடுகளெங்கும் கறை படிந் திருந்தது. நீரின்றி நிர்க்கதியான நிலையில், பூமரங்கள் குரோட்டன் செடிகள் யாவும் பட்டுப்போய் மண்ணில் வளர்ந்திருந்த இடம் தெரியாமல் அழிந்திருந்தன. நிமிர்ந்து நின்ற தென்னை மரங்கள் நெடுஞ்சாண் கிடையாக நிலத்தில் பாறிக்கிடந்தன. அதனருகே இலத்திக்கும்பங்கள்... காய்ந்து கறையானுக்கு இரையாகியிருந்தன.

என்னுள்ளிருந்து பிசிறியடிக்கிறது ஒரு பெருமூச்சு சுனாமி அலை போல! ஊரோடு ஒத்த சோகமும் அவலமும் தான். என்றாலும் என்னுள்ளும் ஒரு மெலிதான வலியுணர்வு. திரும்பி மிதிவண்டியை உருட்டியபடி... வந்தவழி நோக்கி நகருகிறேன்.

நண்பரின் வீடு என்பார்வையில் பிடிபட்டுப்போகின்றது. என்னுள் எந்தவித அதிர்ச்சி அலைகளும் எழவில்லை. யுத்தம் மும்முரமாக நடந்த இடமாகையால் நான் எதிர்பார்த்த காட்சிதான் அது. நண்பரின் விசாலமான கல்வீடு சிதைந்திருந்தது. முன்பு வீட்டைச்சுற்றியிருந்த குளிர்மையைக் காணவில்லை. அது வரண்டு வெறிச்சோடிப்போயிருந்தது. போதாக்குறைக்கு கண்ணிவெடிய கற்றும் பிரிவினர் நிலத்தை உழுது மண்ணை நன்கு பதப்படுத்தி வைத்திருந்தனர்.

எதுவித சலனமுமற்ற மனதோடு சிதைந்த வீட்டின் முன்பாக நின்று நண்பரைக் கூப்பிடுகிறேன்.

சிரிப்புத் தொலைந்த முகமாய் நண்பர் உள்ளேயிருந்து வெளியே வருகிறார். என்னைக்கண்டதும் அவரது முகம் மலருகிறது நீண்ட நாட்களின் பின்பு. எனை அன்புடன் வரவேற்றவர், கதிரையில் உட்கார வைக்கிறார். எதிரே தானும் ஒரு கதிரையில் அமர்ந்தபடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகநலம் விசாரிக்கிறார்.

"நான் என்னைப் பற்றி என்னத்தைச் சொல்லுறது? ஊரோடு ஒத்துஓடி... ஒரு இனமாய் முகாமில் கூடி... வேரோடு வாழ்ந்த வாழ்வை – விழி திறக்கையிலும் நினைக்கிறேன் யான்..."

நான் கூறிய பதிலைக்கேட்டு, நண்பர் கெக்கலித்துச் சிரித்துக் கொண்டார். எனக்கும் சிரிப்பு வந்து விட்டது.

"பரவாயில்லையே! இவ்வளவு அழிவுகள், அநியாயங் களுக்குப் பிறகும் கவித்துவம் வருகுது உங்களுக்கு..." நண்பர் கூறுகிறார்.

நான் மீண்டும் சிரித்துவிட்டு, நண்பரைக்கேட்கிறேன்.

"நீங்கள் இப்பொழுது ஒன்றுமே எழுதுவதில்லையே ஏன்?"

நண்பரிடமிருந்து பதில் வரவில்லை. மாறாக அனல் நிறைந்த பெருமூச்சொன்று வெளிப்பட்டு, என்னை உராய்ந்தபடி... போகின்றது.

"நான் இனி எழுதவிரும்பேல்லை."

"ஏன் அப்படி...?" நான் கேட்கிறேன்.

"எல்லாமே வெறுத்துப்போச்சுது...!" நண்பர் கூறுகிறார்.

நண்பரின் மனநிலை புரிகிறது எனக்கு. நான் எதுவும் கூறாது அவரையே பார்க்கிறேன்.

போரின் தாக்கம் புலப்படுகிறது அவர் வார்த்தைகளில். போருக்கு முன்னர் எழுதிய படைப்புக்கள் யாவும் முள்ளிவாய்க் காலோடு புதைந்த பின், எஞ்சியது உயிரும் அதன் கூடும் என்பது எனக்குப் புரியாததல்ல. எனது அனுபவமே நண்பரது அனுபவம்.

"வெறுத்துப்போனால் விலகியிருக்க வேணுமெண்டில்லை. விரக்திக்கு முதலிடம் கொடுத்து ஒதுங்கிப்போனால், நடந்து போன நிகழ்ச்சிகளை வெளிச்சத்துக்கு கொண்டுவாறது யார்? உங்களுக்கு என்னைப்போல நிறைய அனுபவங்கள் கிடைச்சிருக்கும் என நினைக் கிறன். பழைய அனுபவங்களை ஒதுக்கிப்போட்டு, இனிப்புதுசா ஒன்றை பாதிக்கப்பட்ட மக்களுக்காக எழுதப்பாருங்கோ." நான் கூறுகிறேன்.

நண்பர் எனது வார்த்தைகளைக்கேட்டு ஆழமாக யோசிப்பது தெரிகிறது. எனது பார்வை, அழிந்து சிதைந்து கிடக்கும் சுற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டாரத்தை மீண்டும் மேய்கிறது. பொழுது சரிந்து இருள் புக ஆயத்தமாகும் வேளை, நான் நண்பரிடமிருந்து விடைபெறுகிறேன்.

என்னை வழியனுப்ப, ஒழுங்கை வாசல் வரை வந்த என் நண்பர் கூறுகிறார்.

"நீங்கள் கூறியது நல்ல விடயம். இனி எனது ஆக்கங்களை ஊடகங்கள், சஞ்சிகைகளில் பார்க்கலாம்; படிக்கலாம்."

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் ஏதோ ஒரு ஒப்புக்குச் சொன்ன வார்த்தை அவரது எழுதாமௌனத்தைக் கலைத்து விட்டதில், மனதுள் நிறைந்து கொண்டது பூரிப்பு. இனி அவர் பேனா உறங்காது. நடந்து முடிந்த அழிவின் தரிசனங்கள் பற்றி கதை, கவிதைகளாக... அவரின் படைப்புக்கள்...!

நான் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். ஆனாலும் இறக்கையடித்துப் பறப்பதான உணர்வு எனக்குள்!

தினமுரசு வாரமலர் : 22.12.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனங்கள் ஒன்றல்ல...

அவனுக்குள் மனம் ஒரு போராட்டமாக இருந்தது. வன்னிமண் மீதான யுத்தத்தின் போது எறிகணை அதிர்வில் அவன் செவிப் புலன் இழந்திருந்தான். "காலவோட்டத்தில் எல்லாம் சரியாகிவிடும்..." என்ற வைத்தியர் களின் வார்த்தைகள் வலுவிழந்து போக, சமூகத்தின் எள்ளலுக்கும், ஏளனத்துக்கும் ஆளாகிப்போனான்.

கண்பார்வையற்ற ஒருவனுக்கு இந்தச் சமூகம் காட்டும் அனுதாபத்தை ஏன் செவிப் புலனற்றவர்கள் மீது காட்டுவதில்லை? என்ற சிந்தனை அவனுள் குடைந்து கொண்டிருந்தது நெடுநாட்களாக.

நாட்கள் சருகுகள் போல உதிர்ந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் அவன் பயணித்துக் கொண்டி ருந்தான் பயணிகள் பேருந்தில். அவனுக்குப் பக்கத்தில் ஒரு இளம் பெண். அவளது செவி யொன்றில் கேட்கும் திறன்கருவி பொருத்தப் பட்டிருந்தது.

பேச்சுக்கொடுத்து விசாரித்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் போருக்குள் அகப்பட்டவள் என்பது புலனாயிற்று அவனுக்கு.

அவன் சிந்தித்தான்.

ஊனங்கள் எனக்கு மட்டுமல்ல! இன்னும் பல்லாயிரம் பேருக்கு உண்டு. வலியின் ரணங்களை உணர்ந்தவர்கள் நாங்கள். இது நமக்கு போர் தந்த பரிசுகள். மனம் புண்பட வேண்டிய அவசியமில்லை.

அவனுள் கிடந்து குமைந்த தாழ்வான எண்ணங்கள் தவிடு பொடியாகிப்போக, அவன் திரும்பி அவளைப்பார்க்கிறான்.

சிரிப்பற்ற அவளது முகத்தில் போர் அனர்த்தத்தின் வெக்கை புலப்பட்டுக் கொண்டிருந்தது அவனுக்குத் தெளிவாக...

***

அவளது மனம் வெறுமையாகிக் கிடந்தது. விரக்தியின் உச்சத்தில் அவள் இருந்தாள். எதிலும் பற்றுதல் இல்லாதவொரு உணர்வு அவளுள் பரவியிருந்தது.

'சே... காயப்பட்ட மாதிரிக்கு செத்துப்போயிருக்கலாம்...'

அடிக்கடி அவள் அதையே சிந்தித்தபடி...

மீள்குடியேற்றத்துக்கென அவள் ஊருக்கு வந்த நாளில் இருந்து அதையே சிந்தித்த வண்ணமாய்... பொழுது போய்க் கொண்டிருந்தது.

"அம்மா..."

அவள் அசையவில்லை.

"அம்மா..."

மீண்டும் குரல் ஒலிக்கிறது.

அவள் அசைவில்லை. மௌனமாக நின்றாள்.

அவளுக்குப் பின்னால் நின்று அழைத்த அவளது மகள் அவளுக்கு முன்பாக வந்து நின்று, சாப்பிட வரும்படி... சைகைமொழி மூலம் கூறியபோதுதான், அவளுக்கு விளங்கியது.

சற்று நேரம் தனது மகளின் முகத்தையே உற்றுப்பார்த்தவள்... எதுவும் கூறாது எழுந்து மகளுடன் நடந்தாள்.

கிபிர்க் குண்டின் தாக்கத்தில் செவிப்புலன் பாதிக்கப்பட்டுப் போன நிலையில், ஊரவர்களால் 'செவிட்டுப்பிள்ளை' என அடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக அழைக்கப்படும் வேதனையை மகளது ஆதரவான கரம் பற்றிய பிணைப்பு... மகளுக்காக வாழ வேண்டுமென்ற வைராக் கியத்தை உண்டு பண்ணியது அவளுக்குள்.

***

அது ஒரு அரசாங்க வைத்தியசாலை. நேரம் பன்னிரெண்டாகி விட்டிருந்தது. நோயாளர்களைப்பார்வையிட உறவினர்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

அப்புவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவர் விடுதியின் வாசலை அடிக்கடி பார்த்து ஏமாந்த வண்ணமிருந்தார். கண்கள் பனித்துக்கொண்டன. தொண்டை வரட்சியெடுத்தது. கட்டிலின் தலைமாட்டின் அருகே 'ஸ்டூலில்' இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து இரண்டு மிடறு குடித்துவிட்டு, போத்தலை மூடி வைத்தவர், திரும்பி வாசலைப் பார்த்தார். அப்புவைத்தேடி எவரும் வரவில்லை.

'கடவுளே! இந்தக் கடைசி நேரத்தில எனக்கேன் இப்படியாய்ப் போனது...?' அவர் தனக்குள்ளேயே கேட்டுக்கொண்ட போது அதற்கான விடை கிடைக்கவில்லை அவருக்கு...

வலைஞன் மடத்து வடலிப்பனைகளுக்கு நடுவில் அவரது குடும்ப வம்சம் ஒரு ஆட்டிலறிக் குண்டில் அலங்கோலமாகச் சிதைக் கப்பட்டுப் போக, அவர் மட்டும் பலத்த காயங்களுடன், செவிப்பறைப் புலன் இழந்தவராய், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின் அகதிமுகாம் சென்றதெல்லாம் கடந்து முடிந்த சோக நிகழ்வுகளாகும்.

இன்று அவர் ஆதரவற்ற நிலையில், தூரத்து உறவினர் ஒருவரின் வருகைக்காக காத்து நிற்கிறார்.

முதல் நாள் உறவினர் வந்து அந்த அப்புவைப்பார்த்த போது, அவருக்கு காது கேட்காது... என்ற எண்ணத்தில் வாய்கூசாது கூறிய வார்த்தைகள்... அப்புவால் அதை ஓரளவு விளங்கிக் கொண்ட போது, ஜீரணிக்க முடியாமல் தவித்தார்.

"சே... உந்தக்கிழவன் சண்டேக்கை தப்பின நேரம் செத்தது களோட செத்திருக்கலாம். காது கேளாததோடை நாங்கள் படுகிற பாடு..." கூறிவிட்டு அந்த நபர் போய்விட்டார்.

அப்புவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதைக் கண்ட பக்கத்து கட்டில்காரன் ஒருவன் எழுந்து வந்து அப்புவைக் கேட்டான்.

"ஏனப்பு அழுகிறியள்...? சாப்பிட்டியளே? ஏன் ஒருத்தரும் வரேல்லையே...?"

அவன் வினவியது அப்புவுக்கு விளங்கவுமில்லை; கேட்கவுமில்லை. அவர் மௌனமாக இருந்தார். அப்புவைக் கேள்வி கேட்டவன் தனது கட்டிலின் மேல் கிடந்த ஒரு உணவுப்பொதியை எடுத்து அப்புவிடம் கொடுக்க, அப்பு வாங்க மறுத்தார். அவன் அவரைப்பார்த்து மென்மையாகச் சிரித்துவிட்டு, அவருக்குப் பக்கத்தில் உணவுப் பொதியை வைத்தபின், தனது கட்டிலில் போய் அமர்ந்து கொண்டான்.

அப்பு அவனை உற்றுப்பார்த்தார்.

"தம்பி... நீ எந்த இடம் ராசா...?"

கட்டிலில் இருந்தவன் எழுந்து வந்து அப்புவின் முகத்தருகே தனது செவியைக் கொண்டு போய் "என்ன...?" என்று கேட்டான்

அப்புவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"உனக்கு காது கேட்காதா...?" அப்பு தனது கைகளால் சைகை மூலம் கேட்டார்.

"இல்லை..." என்று பதில் கூறிய அவன், மாத்தளன் - கப்பல் றோட்டில் ஐஞ்சிஞ்சிச் ஷெல் அதிர்வில் தன்காது, கேட்கும் தன்மையை இழந்த காரணத்தைக் கூறினான்.

அப்புவின் கண்கள் மீண்டும் பனித்துக் கொண்டன. அவனைப் பார்த்து முகம் நிறைந்த முறுவலோடு அவனது உணவுப்பொதியை இரு கரங்களாலும் எடுத்து அணைத்துக் கொண்டார் தன் நெஞ்சோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை வேர்கள்

முருகேசுவுக்கு கவலை மனதைக் குடைந்து கொண்டிருந்தது. வன்னிப் போரின் பின்பு, இரண்டு வருடங்கள் செட்டிகுளம் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் அகதியாக வாழ்ந்து விட்டு, மீள்குடியேற்றமாக இப்போது புதுக்குடியிருப்புக் கிராமத்துக்கு வந்தபோது, கிராமம் அலங்கோலமாக இருப்பதைக்கண்டு அழுதே விட்டான்.

போரின் உச்சப்பயன்பாடு கிராமத்தின் ஒவ்வொரு இடங்களிலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன அழிவின் பிம்பங்களாக. மக்களின் வாழ்மனைகள் சிதைந்திருந்தன. பயன்தரு பல கனிமரங்கள் மண்ணில் பாறிக் கிடந்தன. சிரச்சேதம் செய்யப்பட்ட உடல் போன்று எஞ்சிய எச்சத்தின் சுவடுகளாய் வட்டுக்கள் முறிந்த நிலையில், பனைகள் மற்றும் தென்னை மரங்கள் காட்சியளித்தன.

குண்டுகள் விழுந்ததில் குழிகளாய்ப் போன சாலையின் நிலப்பரப்புக்கள்... தூரம் ஒரு இடைவெளிகளில் காப்பரண்கள்... இடி பாடைந்த இல்லங்களைச் சுற்றி நாயுண்ணிச் செடிகள்... மூக்குத்திப்பூண்டுகள்... இவற்றோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களிலிருந்து பழுத்துவிழுந்த இலைகள் நிலமெங்கும் பரவி யிருந்தன சருகுகளாக... அதனிடையே விச ஜந்துக்கள்... இவற்றின் மத்தியில் முகம் இறுகியதோற்றத்துடன் மௌனம் குடிகொண்ட மீள்குடியேறிய ஊர்மக்கள்...

முருகேசுவின் முகமும் சலனமற்றுக் கிடந்தது. அவன் சிரித்து நீண்ட நாட்களாகி விட்டன. புதுக்குடியிருப்பு – ஐயனார் கோவிலடியில் ஆட்டிலறிக்குண்டுகள் வந்து விழுந்து வெடித்த போது, கோம்பாவில் பகுதியிலிருந்து குடும்பத்தோடு வெளிக்கிட்டவன்... இன்று தனி மரமாகி வந்து நிற்கிறான் தன் கிராமத்தில்.

மாத்தளன் – கப்பல் றோட்டில் ஐஞ்சிஞ்சிச் ஷெல்லுக்கு தனது மனைவியைப் பறிகொடுத்த துயரத்தோடு... அடுத்த நிகழ்வாக அம்பலவன் பொக்கணைக் கடற்கரைப் பகுதியில் தன் ஆறு பிள்ளை களையும் ஒரே நாளில்... ஒரே இடத்தில்... ஒரு மாலைப் பொழுதில் ஒட்டுமொத்தமாக கிபிர்க்குண்டுக்குப் பலி கொடுத்த போது, அவனது மனம்பட்ட பதகளிப்பு...?

இறைச்சிக் குவியல்களாய் சிதறிக்கிடந்த தனது பிள்ளைகளின் சதைப்பிண்டங்களைக் கரங்களால் கூட்டி அள்ள முடியாத நிலையில், பொக்கணைக் கடற்கரையெங்கும் அலறல் சத்தம் எதிரொலித்த போது, அங்கு எஞ்சி நின்ற உயிர்க்கூடுகள், வாழ்வின் மீதான பற்றற்ற பிரதிபலிப்பாய், பரிதாபத்தின் வெளிப்பாடாய் தோற்றம்பெற்றிருந்தன.

கடற்கரையில் அலறல் ஒலிகளும், அதற்கப்பால் அடிபாட்டு ஓசைகளும் சற்று ஓய்ந்து கொள்ளும் நிலை ஏற்பட்ட போது, அயலில் இருந்தவர்கள் அதேயிடத்தில் குழி வெட்டி, சிதைந்த சதைப் பிண்டங் களை அதற்குள் இழுத்துப்போட்டு, குழியை மூடிக்கொண்டார்கள்.

அதன்பின்பு –

முருகேசு அநாதரவாகப் போய்விட்டான். வலிகனத்த இதயத் தோடு முள்ளிவாய்க்கால் வரை நகர்ந்து, அதன்பின் எல்லா எழுச்சிகளும் காற்றுப்போன பலூன் போலாகிவிட, அங்கு வலுவாகக் காலூன்றி நின்ற கனத்த சப்பாத்துக்களிடம் தஞ்சமாகிப்போன மக்களில் அவனும் ஒருவனாகி இருந்தான்.

'சே... ஊருக்கு வந்த நேரம் முகாமிலேயே இருந் திருக்கலாம்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசுவின் மனம் சலனப்பட்டுக் கொள்கிறது. அவன் வாழ்ந்த மனை சிதைந்து போய்க்கிடந்தது. ஒரு அறை சிறிய விறாந்தையுடன், அருகே குசினிக் கொட்டில்... வீட்டிற்கு முன்பாக மால்... எல்லாமே அழிந்தனவாய்.... நிகழ்ந்துவிட்ட போரின் உச்சத்தை உணர்த்திக் கொண்டிருந்தன.

வீட்டின் கூரைகள் உக்கியதில் அதனூடாக மழைநீர் கசிந்து மண்சுவர்கள் யாவும் கரைந்து நிலத்தில் விழுந்து கிடந்தன. அதன் முன், இருந்த மால் எரிந்த நிலையில்... எஞ்சிய கூரைத்தடிகள் கரித் துண்டுகளாக... காட்சியளித்துக் கொண்டிருந்தன.

வன்முறையுணர்வு கொண்டோர் வலிந்து அதை எரித்தார் களா? அன்றி விழுந்து வெடித்த ஷெல்லின் நெருப்புப்பாகங்கள் கூரையைத் துளைத்துச் செல்கையில் தீப்பற்றி எரிந்ததா...? என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

வீடு பார்க்க வந்தவன், விழிகளில் நீரை உகுத்தபடி நின்றான். அவனது மனம் விரக்தியின் உச்சத்தில் மேலோங்கி நின்றது. உளம் வலுக்குன்றி, உடல் சோர்வாகிப் போனதால், அவனது மனநிலை உறங்கு நிலையில் அமிழ்ந்திருந்தது.

சற்று தூரத்தில் ஒழுங்கையிலிருந்து உழவு இயந்திர மொன்றின் ஒலி கேட்கிறது. அவன் அங்கு தன் பார்வையைத் திருப்பு கின்றான். பக்கத்துவீட்டுப் பரமநாதன் உழவு இயந்திரப் பெட்டியில் அகதிமுகாமில் கொடுத்த அற்பசொற்ப சாமான்களுடன் தனது குடும்பத்துடன் வந்து கொண்டிருப்பது தெரிகிறது.

பரமநாதனைக் கண்டதும் முருகேசுவுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. போருக்கு முன்னைய நாட்களில் இரண்டு குடும்பங்களும் ஒன்றுக் கொன்று உதவியாய் இருந்து வாழ்ந்ததை நினைத்துக் கொண்டான் முருகேசு. அவனால் அழுகையை அடக்கமுடியவில்லை.

இறுதியாக, இடம்பெயரும் நிலை வந்தபோது, பரமநாதன் தனது உழவு இயந்திரப்பெட்டியில் முருகேசு குடும்பத்தையும் ஏற்றிக் கொண்டு மாத்தளன் பக்கம் சென்றான். கடற்கரை அருகோரம் இரண்டு தரப்பாள்களினால் கூடாரம் அமைத்து, அங்கும் இரு குடும்பங் களாக பொருளாதார நெருக்கடியிலும் நாட்களை நகர்த்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர்.

கப்பல் றோட்டில் உள்ள கிணறு ஒன்றில் குளிப்பதற்காகச் சென்ற முருகேசுவின் மனைவியும், அங்கு நின்ற வேறு சில பெண்களும் சடுதியாக வந்து விழுந்து வெடித்த ஐஞ்சிஞ்சிச் ஷெல்லுக்கு இரையாகிப்போன போது, அக்கணத்தில் எழுந்த எல்லோரினது சாவோலங்களும் கரைந்து போனது கடற்கரைக் காற்றோடு.

அடுத்த பலி... எங்கு, எவருக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது..? என்பதைத் தெரியாத நிலையில், சில நாட்கள் கழிந்து கொண்டிருந்த பொழுது, மாத்தளன் பகுதியை நோக்கி இரணைப் பாலையில் இருந்த இராணுவம் முன்னேறுவதாக செய்திகள் பரவியதும், கையில் அகப்பட்டதை அள்ளிக் கொண்டு, அலறிப் புடைத்த நிலையில் கடற்கரை வழியாக ஓடிய மக்கள் கூட்டத்தில் இருவரது குடும்பங்களும் திசைமாறிப் பிரிந்துவிட்டன.

முருகேசு செய்வதறியாது திகைத்து; தவித்து நின்றான். ஆறு பிள்ளைகளோடு ஒரு நேரச்சாப்பாட்டிற்கே அல்லாடும் நிலை ஏற்பட்டது. பரமநாதன் பக்கத்தில் இல்லாத இடைவெளி அப்போதுதான் விளங்கியது அவனுக்கு.

மாத்தளனிலிருந்து அவலத்தைச்சுமந்த படி... இடையில் அம்பலவன் பொக்கணைப் பகுதிக்கு ஓடி வந்து சேர்ந்தவர்கள், அங்குள்ள ஒரு சிறிய ஆலமரத்தின் கீழ் தஞ்சமடைந்திருந்தார்கள். அடுத்து என்ன நிகழுமோ என்ற அச்சத்தில் எல்லோர் முகங்களிலும் சவக்களை நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அன்றைய மாலைக்கருக்கலில் பசிக்களையோடு படுத்திருந்த முருகேசுவுக்கு அடுத்த பேரிடியொன்று இறங்கியது. மாத்தளன் பக்கமிருந்து வந்த கிபிர் விமானமொன்று வீசிய குண்டுகளுக்கு அவனது பிள்ளைகளும் வேறு சிலரும் சிதிலமாகிப் போனார்கள். இருள் மெல்ல மெல்ல புவிப்பரப்பை மட்டுமல்ல அவனது இதயத்தையும் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது.

இழப்புக்களால் ஏற்பட்ட துயரோடு, இருப்பிடமில்லா வாழ்வினையும் அவன் தன் நெஞ்சினுள் சுமந்தபடி... எப்படி ஓமந்தையூடாக செட்டிகுளம் நலன்புரி நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்தான் என்பது அவனுக்கே தெரியாததாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் இரண்டு வருடங்களின் பின்பு... இப்பொழுது மீள் குடியேற்றமாய் தனது சொந்தக் கிராமத்துக்கு வந்த பொழுது, பரம நாதனைக் கண்டதும், அவனால் தன் மனக் கொந்தளிப்புக்களையும், தீராத சோகச்சுமைகளையும் அடக்கி வைக்கமுடியவில்லை. அவன் அழுது கொண்டிருந்தான்.

முருகேசுவின் அருகில் உழவு இயந்திரம் தன் வேகத்தை குறைத்துக் கொண்டது. அதைச்செலுத்தி வந்த பரமநாதனும் அவனது குடும்பத்தினரும் முருகேசுவின் தோற்றத்தைக் கண்டதும் திகைத்துப்போனார்கள். பரமநாதன் உழவு இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்திவிட்டு, கீழே இறங்கி முருகேசுவின் அருகில் சென்றான். முருகேசு அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு பலத்த குரலில் அழ ஆரம்பித்தான்.

"எல்லாம் போச்சுதடா... என்ர வம்சம் வாழ்க்கையெல்லாம் பூண்டோட போய்த் துலைஞ்சிட்டுதடா..."

பரமநாதனால் முருகேசுவுக்கு ஏற்பட்ட இழப்பை ஜீரணிக்க முடியாதிருந்தது. விழுதுகள் பல பரப்பி நின்ற மரமொன்று வீசிய சுழல் காற்றில் எல்லாம் முறிந்து விழுந்து தனித்துப்போன தோற்றமாய் முருகேசு நிற்பதைக் கண்டுகொண்டான்.

"என்ர ஐயோ... நான் மட்டும் ஏன் தப்ப வேணும்? இனி நான் தனிச்சிருந்து என்னத்தைக் காணப்போறன்? எனக்கேன் இப்படியாய்ப் போனது? நான் ஆருக்கு அநியாயம் செய்தனான்?"

பரமநாதனைப் பார்த்து அழுதபடி... கேட்கிறான் முருகேசு.

"உன்னைப்போலத்தான் சண்டேக்கை தப்பிப் பிழைச்சவை எல்லாரும் இப்பிடிக் கேட்கினம். ஆனால், ஒருத்தருக்கும் சரியான பதிலைச் சொல்லத் தெரியேல்லை."

"நான் தப்பினதைவிட செத்ததுகளோட செத்துப்போயிருக்க லாமடா."

"சீச்சி... அப்பிடிச் சொல்லாதை முருகேசு. செத்ததுகளோட நாங்களும் செத்துப்போக நினைச்சால் மிஞ்சிப்போறது என்ன? ஒண்டுமில்லைக்கண்டியே. இதெல்லாம் போர் எங்களுக்குத் தந்த பரிசு. ஆனால், நாங்கள் போரையோ... போராட்டத்தையோ விரும்பின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கள் இல்லை என்டதை முதல்ல நினை. நாங்கள் வெறும் பகடைக்காய்கள். விழுகிறதும்; எழும்புறதும் எங்கட வாழ்க்கையில ஒன்றாகிப்போன சங்கதி. இப்ப எல்லாத்தையும் இழந்து வெறுங்கை யோட நிற்கிற நாங்கள், திரும்பவும் எங்கட உழைப்பால எழும்பி நிற்பம். இருக்கிற வளத்தைக் கொண்டு பாடுபட்டால், நாங்கள் பழைய நிலைக்கு வந்திடுவம். மண்ணை நம்பிச் சீவிக்கிற எங்களுக்கு அரசியல் எண்டது இரண்டாம் பட்சம் கண்டியே. நீ அழாதை... இனித்தான் நீ வாழ்ந்து காட்ட வேணும். மனதைத் தளரவிடாதை.

பரமநாதன் முருகேசுவின் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத்துடைத்த படி... ஆறுதல் கூறுகின்றான். அந்த ஆறுதலில் தனித்துப்போனதான தாழ்வுணர்வு முருகேசுவின் மனதிலிருந்து அகன்று, புதிய நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது மெல்ல... மெல்ல!

ஞாயிறு தினக்குரல் : 1.4.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கை மரத்து வேதாளங்கள்

"இஞ்சரப்பா உது உங்களுக்குத் தேவை யில்லாத விசயம் கண்டியளே! விருப்ப மெண்டால் அவர் தனக்குத் தெரிந்த வேற இடத்தில போய் கேட்டுப்பார்க்கட்டும். நீங்கள் உதுக்குள்ள தலையைக் குடுத்து வீணாப் பழி பாவத்தை தேடாதையுங்கோ..." கூறிக் கொண்டே வாத்தியாரின் அருகில் வந்து நின்று தேநீர்க் கோப்பையை அவரிடம் நீட்டினாள் மனைவி வள்ளியம்மை.

வீட்டு முற்றத்தின் முன்பாக சடைத்து வளர்ந்து நின்ற வேப்பமரத்தின் கீழ் கதிரையில் அமர்ந்திருந்தவாறு பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சிவசம்பு வாத்தியார் தன் நெற்றிப்புருவங்களைச் சுருக்கியபடி... தன் மனைவியை நிமிர்ந்து பார்த்தார்.

அவருக்குக் குழப்பமாக இருந்தது.

'இவளென்ன அடியும்; நுனியும் இல்லாத கதை கதைக்கிறாள்...' என தனக்குள் நினைத்துக் கொண்டே, மனைவியிடமிருந்து தேநீர்க் கோப்பையை வாங்கிக்கொண்டார்.

தன் கணவனின் முகத்தில் பிரதிபலித்த சந்தேகச்சாயலை சற்று ஒரு கணத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்துவிட்ட அவள் மீண்டும் கூறினாள்.

"நாங்கள் ஆருக்குத்தான் பாவம் செய்தமோ கடவுளுக்குத் தான் தெரியும். ஷெல்லுக்குள்ள ரண்டு பொடியள் செத்துப் போச்சுது கள். இன்னொன்டை இயக்கம் போராட்டத்துக்கெண்டு பிடிச்சுக் கொண்டுபோய் சாக்காட்டிப் போட்டுது. எஞ்சியிருக்கிறது பெட்டை தான். அதெண்டாலும் உயிரோடை இவ்வளவு பிரச்சினைக் குள்ளாலையும் தப்பிப்பிழைச்சதே ஏதோ பெரிய காரியந்தான்."

வள்ளியம்மை கூறிவிட்டு அவரைப் பார்த்தாள்.

அவள் சொல்வதைக்கேட்டபடியே... சிவசம்பு வாத்தியார் தேநீரைக் குடித்து முடித்துவிட்டு, வெற்றுக் கோப்பையை மனைவி யிடம் கொடுத்தார்.

"நீ... என்ன சொல்ல வாறாய் எண்டது எனக்கு ஒண்டுமாய்ப் புரியுதில்லை..." என்று கூறவும் வள்ளியம்மை அவரைக் கடிந்து கொண்டாள்.

"உங்களுக்கு ஒரு இழவும் விளங்காது. உங்கட பழையகால சிநேகிதர் பாலசுந்தரம் இண்டைக்கு வாறன் எண்டல்லவோ சொன்னவர். அவர் அண்டைக்கு இஞ்ச வந்த இடத்தில உங்களிட்ட என்ன கேட்டவரெண்டது எனக்குத் தெரியும். அவர் கதைச்சது என்ர காதிலையும் எத்துப்பட்டது கண்டியளே! உங்களுக்கு இந்த வேலை வேண்டாம். உதால பழி பாவமும் தேட வேண்டாம். நாங்கள் ஏற்கனவே மூண்டு ஆம்பிளைப் புள்ளையளை சண்டேக்கை தின்னக் குடுத்துப் போட்டு இருக்கிறம். அவர் திரும்பவும் கேட்டால், என்னால உது ஏலாதெண்டு முகத்தில அடிச்ச மாதிரிச் சொல்லி விடுங்கோப்பா..."

சிவசம்பு வாத்தியாருக்கு இப்போதுதான் தன் மனைவி கூறிய வார்த்தைகளின் தாற்பரியம் விளங்கிக் கொண்டது.

"ஓ...! அதுவா..." என்று வியப்புத் தொனியில் கூறியவர், அவளைப்பார்த்து மென்மையாக புன்முறுவலொன்றை உதிர்த்தார்.

"அவன் கிடந்தான் விசரன்..." என்று வாத்தியார் கூறியதைக் கேட்டு, தன் கணவனுக்குத் தன்னைப்போலவே பாலருடைய வேண்டு கோள் பிடிக்கவில்லை என்பதை விளங்கிக் கொண்டாள் வள்ளியம்மை.

மேற்கொண்டு அவள் அவரோடு எதுவும் கதைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றுத்தேநீர்க் கோப்பையுடன் வீட்டினுள் சென்று மறைந்தாள். வெப்பம் குறைந்து கொண்டிருந்த அந்த பின்னேரப் பொழுதில் சிவசம்பு வாத்தியாருக்கு சிந்தனைகள் சிறகடிக்கத் தொடங்கின.

எத்தனை மனிதர்கள் இவ்வுலகில்...! எத்தனை குணங்கள் அவர்தம் மனதில்...! எத்தனை கொள்கை தான் அவர்களுள்ளே...!

மனிதர்களிடையே மனிதம் எனும் உணர்வு மரணித்துக் கொண்டிருக்கிறதா? சுயநலம் மிகுந்தவர்களாய்... சொத்து சுகம் மட்டுமே வாழ்க்கையின் பிரதான அம்சமென்று, அதையே தேடுபவர் களாய்... பொதுநலத்தில் நாட்டம் குறைந்து, நெஞ்சுள் புரையோடிப் போயிருக்கும் அகங்கார மரபிலூறிய பழக்கவழக்கங்களோடு இந்த மனிதர்கள்... இன்னமும் இப்புவி மீது எப்படி 'மனிதன்' என்ற போர்வைக்குள் வாழ முடிகின்றது?

"இஞ்சருங்கோ... உங்களைத்தான்..."

மீண்டும், மனைவி வள்ளியம்மையின் குரல் கேட்டு வாத்தி யாரின் சிந்தனைகள் அவருள்ளே விடுபட்டுப் போகின்றன. அவர் திரும்பித் தன் மனைவியைப் பார்க்கின்றார்.

"என்ன நான் சொன்னதிலிருந்து கடுமையாய் யோசிக்கிறியள் போலக்கிடக்குது..." கூறியபடி அவரருகில் வெற்றிலைத்தட்டத்தோடு அமர்ந்தாள் வள்ளியம்மை.

சில விநாடிகள் அவ்விடத்தில் நிலவிய மௌனத்தைக் கலைக்குமாப்போல் வாத்தியாரிடமிருந்து வார்த்தைகள் வெளிப் பட்டன.

"எங்கட சனம் இன்னும் திருந்தின மாதிரியில்லை. பேந்து பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறின கதையாக அவனவன், தான்தோன்றித்தனமாக நடக்க வெளிக்கிட்டிட்டான்கள்..."

வாத்தியார் கூறிவிட்டு, வீசும் காற்றுக்கு பூக்களைச் சொரிந்து கொண்டிருக்கும் வேப்பமரத்தை நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு கடந்த கால மரபுவாத நினைவுகள் மனத்திரையில் விரிந்து கொள்ளத் தொடங்கின.

"என்னப்பா, உங்கட பாட்டுக்கு வேப்பமரத்தையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறியள்...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... ஒண்டுமில்லை..." என்றவர், பழைய நினைவுகளிலிருந்து மீண்டு... தன் மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

வள்ளியம்மைக்கு அவரது மௌனம் நிறைந்த பார்வை குழப்பத்தை உண்டு பண்ணியது.

"எங்கட இனம் சனத்தை நினைக்க சிரிப்பாக்கிடக்குது. அதே வேளை சிந்திக்க வேண்டியும் இருக்குது."

"அதாரப்பா உங்கட இனம்சனம்...?" வள்ளியம்மை திருப்பிக் கேட்டாள்.

"வேறை ஆர்... என்ர பழைய கூட்டாளி பாலசுந்தரம் தான்!"

"ஓ... அவரா!"

தன் மனைவியின் குரலில் சலிப்பும் அலட்சியமும் தொனித்ததைக் கண்டு வாத்தியார் வாய்விட்டுச் சிரித்தார்.

"உங்களுக்கு இப்ப சிரிப்பும் வரும். உங்கட கூட்டாளியும் வரும். இண்டைக்கு இந்த நேரம் தான் வாறன் எண்டு அறிவிச்சவரல்லோ..."

வள்ளியம்மை கூறிமுடிக்கவில்லை... அவர்களது வளர்ப்பு நாய் குரைத்தபடி.... தெருப்படலையை நோக்கி ஓடியது. இருவரும் திரும்பி அங்கே பார்த்தார்கள். வள்ளியம்மை கூறியது போன்று வாத்தியாரின் நண்பர் பாலசுந்தரம் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"வா... பாலு..."

வந்தவரை சிவசம்பு வாத்தியார் வரவேற்று கதிரையில் உட்கார வைத்தார். சில நிமிடங்கள் அவர் நாட்டு நடப்புக்களைப் பற்றி கதைத்து விட்டு, நேராக விசயத்துக்கு வந்தார் வாத்தியார்.

"நீ கேட்ட விசயம் சரிவராது பாலு..."

சிவசம்பு வாத்தியார் அப்படிக் கூறியதும் பாலசுந்தரம் திகைத்துப்போனார்.

"என்ன சிவா இப்படிச் சொல்லுறாய்? இப்ப இஞ்சால புதுக் குடியிருப்புப் பக்கம் மீள்குடியேற்றம் செய்ததெண்டாப்போல உன்னட்டை கேட்டு வைச்சனான். சண்டையில தாய், தேப்பன் செத்ததுகளின்ர பிள்ளையள்... அதுவும் தோட்டக்காட்டுப் பொடியள் எண்டால், இன்னும் நல்லது கண்டியே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பமர உச்சியைப்பார்த்தபடி... ஆட்காட்டி விரலால் தாடையைச் சொறிந்து கொண்டிருந்த சிவசம்பு வாத்தியார், திரும்பி தனது நண்பரை ஒருவித அர்த்த புஷ்டியோடு பார்த்தார்.

"அதென்ன தோட்டக்காட்டுப் பொடியளா வேணுமெண்டு நிற்கிறாய்?"

"ஹி...ஹி...ஹி...ஹி... வாத்தி வேலை பார்த்த உனக்கு இதெல்லாம் தெரியாத மாதிரி நிற்கிறாய். தோட்டக் காட்டுப் பொடியள் எண்டு சொல்லேக்கை அதுகள் வெயில், மழையுக்கை நிண்டு நல்லா வேலை செய்யுங்கள். அதோடை நல்லா வேலையும் வாங்கலாம் கண்டியே! ஆரேன் இருந்தால் சொல்லு. இப்பவே முற்பணமா கொஞ்சக் காசைக்குடுத்திட்டு கூட்டிக் கொண்டு போறன்"

சிவசம்பு வாத்தியார் சில விநாடி வரை கண்களை மூடியபடி... யோசனையில் ஆழ்ந்து விட்டு விழிகளைத்திறந்தார்.

"நீ சொல்லுற மாதிரிப் பொடியள் நாலைஞ்சு பேர் தாய், தேப்பன் இல்லாததுகள் இஞ்சை இருக்குதுகள்தான். ஆனால், அந்தப் பிள்ளையளை உன்னோடை அனுப்ப நான் விரும்பேல்லை"

சிவசம்பு வாத்தியாரிடமிருந்து நிதானமாக... அதே சமயம் ஆணித்தரமாக வெளியே வந்தன வார்த்தைகள்.

பாலசுந்தரத்துக்கு முகம் கறுத்துவிட்டது. மட்டுமல்ல, கோப உணர்வுகளும் அவர் முகத்தில் கொந்தளிக்கத் தொடங்கின.

"பாலு நான் சொல்லுறன் எண்டு குறை நினைக்கக்கூடாது. நடந்து முடிஞ்ச சண்டைக்குள்ள நாங்கள் இழந்து போய் நிற்கிறது கொஞ்சநஞ்சமல்ல. நாங்கள் அனுபவிச்ச போரின் வலிகள் இன்னமும் எங்களை விட்டுப் போகேல்லை. நீ போருக்குள்ள முகம் கொடுக்காதவன் எண்டதால எங்கட வலியின் கனதி உனக்குப் புரியுற மாதிரியில்லை. அதாலைதான் பழைய படி உன்னைப் போல ஆட்கள், வேதாளத்தின்ர குணத்தை காட்ட வெளிக்கிட்டிருக்கிறியள். உன்னுடைய விருப்பத்தை என்னால நிறைவேற்றி வைக்க முடியாது. நீ போட்டு வா..."

கையில் தேநீர்க் கோப்பையுடன் வந்த வள்ளியம்மை அங்கு பாலசுந்தரத்தைக் காணாமல் திகைத்து நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கையப்பா உங்கட கூட்டாளி...?"

"அவன் இனி இந்தப்பக்கமே வரமாட்டான்..." கூறிவிட்டுச் சிரித்துக் கொண்டார் வாத்தியார்.

என்ன நடந்திருக்கும்... என்பதைப்புரிந்து கொண்ட அவளும் தனக்குள் சிரித்தபடி... நகர்ந்தாள் அவ்விடத்தைவிட்டு.

தினமுரசு வாரமலர் : 12.4.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதுவொரு காலம்

மார்கழி மாத அமாவாசை இருளோடு கனத்த மழையும் கைகோர்த்தபடி... மழையின் இரைச்சல் ஒலிக்கு சுருதி சேர்ப்பது போன்று, தாழ்ந்த நிலப்பிரதேசத்தில் நிற்கும் வெள்ள நீருக்குள்ளிருந்து தவளைகளின் தாளங்கள்... அந்த நடுச்சாம இரவின் அமைதியைக் குலைத்துக்கொண்டிருந்தன.

இடைக்கிடை பூமியின் நிலப்பரப்பை படம் பிடிக்கும் மின்னலின் ஒளிகள்... கூடவே இடிமுழக்கங்கள்... அவற்றோடு வீசும் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல், எந்த நேரமும் பறந்து... விழுவதற்கான ஆயத்த நிலையில் ஆங்காங்கே தற்காலிக வீட்டுக் கூரைகளின் தகரங்கள்...

சின்னையாக்கிழவருக்கு அந்த குளிர் கால சூழ்நிலையிலும் நித்திரை வருவதாக இல்லை. நெஞ்சுள் கனத்துக் கொண்டிருக்கும் பழைய நினைவுகள் இன்றுவரையிலும் அகலாதனவாய்... நிதம் அரித்துக் கொண்டி ருந்தன அவர் மனதை. எதிலும் பிடிப்பற்ற மனோநிலையாகிப் போன வாழ்வு. இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ன...? செத்துமென்ன...? என்ற விரக்தி மனப்பான்மைக்கும் அப்பால்... கழிந்து கொண்டிருந்தன அவரது நாட்கள்.

நைந்து போன இறப்பர் பாயொன்றில் கூனிக்குறாவிக்கிடந்த அவருக்கு, கால்பக்கம் போர்வையின் மேல் ஏதோ ஊர்வதான ஒரு உணர்வு. போர்வையை தலையிலிருந்து சற்று நீக்கிவிட்டு பார்க்கிறார். தகரவீட்டுக்குள் எங்கும் ஆக்கிரமித்திருந்தது கும்மிருட்டு.

"பிள்ளை... எடிபிள்ளை... தங்கச்சி... எடிமோனை..."

பதிலுக்கு குரலெதுவும் எழவில்லை. மெதுவாக தலைமாட்டுக் கடியில் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்து, குச்சிகளை உரசி... பற்ற வைக்கமுனைகிறார். குளிரின் தாக்கத்தால் இளவாலித்துப் போயிருந்த குச்சி மருந்துகள் உதிர்ந்து கொட்டுப்படுவது தெரியாத நிலையில்... அவர் மீண்டும் தீப்பெட்டியில் உரசிக் கொண்டிருந்தார் குச்சிகளை.

சில நிமிடங்களின்பின் ஒரு குச்சி தீப்பிடித்துக் கொள்கிறது. சிறிய சுவாலையாக எரிந்த வெளிச்சத்தின் உதவியுடன் கால்மாட்டுப் பக்கம் பார்க்கிறார். அங்கே எதுவும் தென்படவில்லை. வீசும் காற்றுக்கு அச்சிறிய சுவாலை அணைந்து போகாதபடிக்கு... தீக்குச்சியை பக்குவமாகப் பொத்தி அணைத்தபடி சுழல விடுகிறார் தன்பார்வையை.

மிதிமிஞ்சிய தேட்டங்கள் எதுவுமற்ற அச்சிறிய தகரக் கொட்டகைக்குள் மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் இருவருமாக ஒரு ஒதுக்குப்புறத்தில் படுத்திருந்தார்கள். இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் வழங்கப்பட்ட சாமான் சக்கட்டுக்கள் அணையப்போகும் அந்தச்சிறிய சுவாலையின் வெளிச்சத்தில் தெரிகின்றன.

சின்னையாக் கிழவரிடமிருந்து பெருமூச்சு வெளிப்படுகிறது. அத்தோடு, தீக்குச்சிச் சுவாலையும் அணைந்து விடுகிறது. தகர வீட்டுக்குள் மீண்டும் குடிகொள்கிறது கும்மிருட்டு. கிழவருக்கு நினைவுகள் திசைதிரும்புகின்றன.

அதுவொரு காலம்...! அந்தக் காலத்தைப் போன்று இனியொரு காலம் எமக்கு வருமா?

சின்னையாக்கிழவர் அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கிறார்.

எவ்வளவு பசுமையான காலங்கள் அவை! வேளாண்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலும், வீடும் வாசலுமாக உழைப்பை மூலதனமாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அது! வீட்டு மாலுக்குள் மூன்று போகத்துக்குரிய நெல்லு மூடைகள்... அவரின் பிரயாசையின் வெளிப்பாடாய் காட்சியளித்துக் கொண்டிருக்கும்!

அத்தோடு, வேளாண்மைத் தொழில் தவிர, காலபோகங்களில் வீட்டைச்சுற்றி மரக்கறி வகைகளும், மேட்டுத்தரைகளில் நிலக்கடலை, எள்ளு, கொள்ளு, பயறு, கௌபி போன்ற தானியப்பயிர்களைப் பயிரிட்டு... அதன் பலனைப் பெற்றுக் கொள்வதும்... பங்குனி, சித்திரை மாதங்களில் வெட்டுக்குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடித்து வருவதோடு, வயல் காவல்களுக்குச் செல்லும் சமயங்களில், பயிரை மேய வரும் முயல், பன்றி போன்ற மிருகங்களை வேட்டையாடி... வீட்டுக்கு கொண்டு வருவதும்... மாரியம்மன் பொங்கல் திருநாளில் ஊரே ஒன்று கூடி... பொங்கிப்படைத்து மகிழ்ந்து சென்ற அந்தக் காலங்கள்... அதுவொரு காலம்!

சின்னையாக்கிழவருக்கு பழைய நினைவுகள் மனதுள் குமைச்சலைக் கொடுக்க ஆரம்பிக்கின்றன.

எங்கள் வாழ்க்கை ஏன் இப்படியாய்ப் போனது...? என்பது குறித்து அவர் தனது அனுபவத்தினூடாகவும்... அறிவுக்கெட்டியவரையிலும் சிந்தித்துப்பார்த்த போதில், எதுவும் புலப்படுவதாக இல்லை அவருக்கு.

மனிதத்தைத் தொலைத்த மனிதர்கள்... தங்களின் சுயநல தனிச்சுகபோக வாழ்க்கைக்காக, அறியாமை உணர்வுகள் மிதமிஞ்சியிருந்த இன்னொரு மக்கள் கூட்டத்தைப் பயன்படுத்த வெளிக்கிட்டதன் விளைவே, இன்று வெறுமையாகிப் போன வாழ்வை சுமக்க வேண்டியுள்ளதென அவரது சிந்தனைகளில் சில வேளைகளில் உதித்தாலும், அவலத்தின் மூலகாரணியை அவரால் முற்று முழுதாக விளங்கி கொள்ள முடியாமலிருந்தது.

நாளடைவில்... துன்பியலே தொடராகிப்போன நிலையில்... அதன் ரணங்களைச் சுமந்தபடி... ஒப்பாரியும் ஓலமுமாக... அழுகையும் அந்தரிச்ச சீவியமுமாக... பேசுவதற்கும், சுயமாக கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரமற்ற மனிதர்களாக... காலம் நகர்த்திக் கொண்டிருந்த போது, அவலத்தின் உச்சப் பெறுமானத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் தரிசித்துக் கொள்ள முடிந்தது.

இன்று –

சிதிலமடைந்து கற்குவியல்களாகக் கிடக்கும் தனது மூதாதையரின் வீட்டுப்பக்கத்தில் தடி, தண்டுகளாலான தகரக் கொட்டிலுக்குள் உறக்கம் வராத நிலையில் அவர். கொட்டிலைச்சுற்றி குப்பைகள்... மண்டுப்பற்றைகள்... விஷஜந்துக்கள்...

ஏற்றமான தனது வாழ்வு இறங்கிப் போய்விட்டதை அவரால் ஒவ்வொரு கணத்திலும்... ஒவ்வொரு நிகழ்வுகளிலும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. தனது காலத்தின் பெரும்பகுதி உழைப்போடும் அதன்பின்பு 'உபத்திரவங்களோடும்' சென்றுவிட்டதை அவரால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அவருக்கு தனது மகனை நினைக்கக் கவலையாக இருந்தது. அவனும் தன்னைப்போலவே பிரயாசைக் காரன் என்பதில் அவருக்கு மெத்தப் பெருமை.

இருந்தபோதிலும், தான்வாழ்ந்த காலத்தில் இருந்த அமைதி யான சூழ்நிலைகளும் சுதந்திரமான செயற்பாடுகளும் இனி வரும் காலங்களில் மகனுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கிடைக்குமா...? என்பது குறித்து அவர் அடிக்கடி சிந்தித்த வண்ணம் கவலைப்படுவ துண்டு.

வெளியே மழை விடுவதாக இல்லை. பாரிய இரைச்சலோடு அது பெய்து கொண்டிருந்தது. கூரைத்தகரத்திலிருந்து ஒலிகள் ஏற்பட்ட வண்ணமிருந்தன. போதாக்குறைக்கு குளிர்வேறு... முன்னைய காலங்களில் வயல்களில் காவலுக்காய் கொட்டிலினுள் பரண்கட்டிப் படுத்திருக்கும் போது... மார்கழி மாத மழைக்குளிரோ அன்றிப் பனியோ எதுவானாலும், அவற்றுக்கு ஈடு கொடுத்து நிமிர்ந்து நின்ற அவரது உடல், இப்போது தளர்ச்சியடைந்து விட்டதால் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் சற்று நடுக்கம் கொண்டிருந்தது.

'நாசமாய்ப் போனநித்திரை... இன்டைக்கென அதுவும் வராதாம்...'

தூக்கத்தை மனதில் சபித்தபடி... பாயிலிருந்து உடலை நிமிர்த்தி, சப்பாணம் கட்டிக் கொண்டார். தலையணை உறைக்குள் கிடந்த சுருட்டுக்கட்டையையும் தீப்பெட்டியையும் எடுத்துக் கொண்டார். சுருட்டுக்கட்டிலிருந்து, ஒரு சுருட்டை உருவி எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் வைத்துக் கொண்டு, தீக்குச்சியால் தீப்பெட்டியை உரசிய போது, அது தீப்பற்றிக் கொள்ள மறுத்தது. சில நிமிடப்பிரயத்தனத்தின் பின்னர் ஒரு தீக்குச்சி பற்றிக் கொண்ட போது, சுருட்டைப்பற்ற வைத்துவிட்டு, சுவாலையை அணைத்துக் கொண்டார். மீண்டும்... தகரக்கொட்டிலுக்குள் பரவிக்கொள்கிறது கும்மிருட்டு.

பாரிய இரைச்சலுடன் பெய்து கொண்டிருந்த மழை, தன் வேகத்தை சற்றுத்தணித்துக் கொள்வதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. தொடர்ந்து ஒரு வாரமாக கொட்டிக் கொண்டிருக்கும் இம்மழையால் தற்காலிக தரப்பாள் மற்றும் தகர வீடுகளில் வசிப்பவர் களை ஒரு விநாடி தன்னுள் நினைத்துக் கொண்டார் சின்னையாக் கிழவர்.

“பள்ளப்பக்கம் கொட்டில் போட்டுக் கொண்டிருக்கிறவை யளின்ர வீடுகளுக்கை இந்நேரம் வெள்ளம் போயிருக்கும். வெள்ளத் தோட நட்டுவக்காலியள், மட்டத்தேளுகள்... சனங்கள் என்ன பாடுபடுகுதுகளோ கடவுளே...”

தற்காலிக யதார்த்தத்தை புரிந்து கொள்கிறது அவரது மனம். அதேவேளை தனது பழையகாலத்தை நோக்கியும் விரைகிறது.

“அதுவொருகாலம்...”

வாயிலே சுருட்டை வைத்திருந்த நிலையிலும், வார்த்தைகளை உதிர்க்கிறது அவரது வாய்.

வெளியே –

தணிந்து போவதாக போக்குக் காட்டிய மழை... அடம்பிடித்துக் கொண்டது மீண்டும்!

தினமுரசு வாரமலர் : 27.12.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகைகள் நிரந்தரமில்லை

நீண்ட நாட்களாக பொய்த்துப் போயிருந்த வானம் இன்று பொலு பொலுவென கண்ணீர் கொட்டி அழுவது போன்று இருந்தது அவருக்கு. வானம் கொட்டி அழுவதை அவர் எந்தவித இரசனைகளுமின்றி... கரும்புகை போன்று மண்டிக்கிடந்த அந்த வெளிப்பரப்பை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்போது வானம் அழுவது போன்று அவரும் அழத்தொடங்கினார். அவருக்கு மனதிலே ஆயிரம் கவலைகள்... பிரச்சினைகள்... பாரிய இழப்புக்கள்...

ஆனால், வானத்துக்கு...?

வானம் ஏன் அழுகிறது....? அதற்கு என்ன கவலை இருக்கிறது? பூமியிலே மனிதர்கள் செய்யும் சில அராஜகச் செயற்பாடுகளைப் பார்த்து மனம் பொறுக்க முடியாமல், வானமும் அழுவதாக கூறிக்கொள்வது இதைத் தானோ...?

வானம் தன் அழுகையை நிறுத்தவில்லை. அதேபோன்று அவரும் பழைய நினைவுகளால் உந்தப்பட்ட நிலையில் அழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார் அமைதியாக.

மனதில் உள்ள துன்பச்சுமைகள் அழுவதனூடாக... மெல்ல மெல்ல அதன் கனதி குறைவதாகத் தெரிந்தது அவருக்கு.

அழுதும் என்ன பயன்...?

அவரது உள்மனம் கூறிக்கொள்கிறது. ஆயினும், அழுவதிலும் ஓர் ஆனந்தம் இருப்பதை அவரால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

"ஏன்... இதுவரை காலமும் அழுதது போதாதா...?"

மனதில் எங்கோ ஒரு மூலையில் எதிரொலிக்கின்றன வார்த்தைகள். அவர் சுயநிலையடைகிறார் திடுக்குற்றவராக.

உண்மைதான்! இதுவரை காலமும் அழுகையே வாழ்வாகிப் போன நிலையில், இனி ஆனந்தப்பட என்னதான் இருக்கிறது. சிரித்துமகிழ வேண்டிய காலங்களை இடர்கள் நிறைந்த போரின் வலிகள் சீரழித்து விட்டன. இனி எதுவுமில்லை... என்றான நிலையில், சிரித்துமகிழ என்னதான் இருக்கிறது...?

விழிகளிலிருந்து ஒழுகும் கண்ணீர்த்துளிகள்... தெறித்து தரப்பாள் வீட்டின் தாழ்வார நீரோடு சங்கமித்துப் போகின்றன. கூடவே, அடித்துச் செல்லப்படும் நீரோடு... அதன்மேல் நீர்க்குமிழிகள்... மனிதனின் வாழ்வைப் போன்று!

அவர் நீர்க்குமிழிகளை உற்றுப் பார்க்கிறார்.

மனதைப்பாரமாக அழுத்தும் துயரிடைச்சுமைகள்... இந்த நீர்க்குமிழிகள் போன்று மறைந்து போகாதா...? எப்பதான் மனதை விட்டு இவைகள் அகலப்போகிறதோ...?

குளிர்கால நிலையிலும் அவரிடமிருந்து வெளிக்கிளம்புகிறது அனல்மூச்சு. கூடவே நீர்ப்பிசிறல்கள்... இடிமுழக்கங்கள்...

அந்த இடிமுழக்கங்களின் ஒலிகள்... அவரை மீண்டும் இழுத்துச் செல்கின்றன பழைய நிலைக்கு.

எங்கும் அழுகையின் வெளிப்பாடாகவே இருந்தது. துயர் நிரம்பிய சாவொலிகளைக் காற்று அங்கும்; இங்குமாக காவித்திரி கின்றது. வண்ணக் கோல வடிவங்களாய் சிதைந்த தரப்பாள்களில் தெரியும் உதிரத்தெறிப்புக்கள்... அறுபட்ட உடலுறுப்புக்கள் ஆங்காங்கே மணற்தரைகளில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்...

எங்கேயோ இடிமுழக்கங்களுக்கான ஆரம்ப ஒலிகள் அடுத்தடுத்து.

அதன் விளைவு...?

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட அவரது குடும்பத்தில் தனித்துப் போகின்றார் அவர் மட்டும்.

வாழ்வின் பயணம் நேரானதல்ல! வளைவுகளும் நேர்கோடு களுமாய்... கல்லுகளும் முள்ளுகளுமாய்... குன்றும் குழிகளுமாய்... எதிர் நீச்சல் அடிப்பதற்கு அவர் மிகவும் சிரமப்பட்டார்.

வலுக்குன்றிய உடலோடு அவருக்கு சுமையாய்த் தெரிந்தது வாழ்க்கை.

"ஏதோ இருக்கும் வரையில் இழுபடுவம்..." என்று எத்தனை தடவை, எத்தனை நாளைக்குத்தான் மனசுக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டிருப்பது?

"பட்ட கடன் கழியுமோ?

பாவி உயிர் பிரியுமோ?

கட்டை காடு செல்லுமோ?

கவலைகள் இனி மறையுமோ?"

அவருக்கு உளத்தாக்கங்கள் அதிகமாகும் போது மனது விரக்தியாய்ப் பாடிக்கொண்டே போகும். அவருக்கென்று உலகில் எதுவுமில்லை. 'தனித்துப் போய்விட்டேன் யான்...' எனும் மனப்பாங்கு அவருள் குடிகொள்ளத் தொடங்கிய நாளிலிருந்து அழுகையே அவருக்கு வாழ்வாகிப் போனது.

சில சமயங்களில் நான் ஏன் அழுகிறேன்...? எதற்காக அழுகிறேன்...? என்ற எண்ணங்கள்... விபரமற்ற நிலையாகி... அழுது கொண்டே இருப்பார்.

அவல ஒலிகள்... ஒப்பாரி ஓலங்கள்... இரத்தச் சிதறல்கள்... உடலுறுப்பு இழந்தோர்... போன்றவை அவரது கண்களில் தென்படும் சமயங்களில், அவரின் மனம் தளர்வடையத் தொடங்கி விடும். விழிகளி லிருந்து நீர் விழத்தொடங்கும். கால்கள் தளர்ச்சியுற... கரங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையாவது பற்றிப் பிடித்துக் கொண்டு நிற்பார்.

'கடந்தகாலத்துயரின் வலிகள்... எனக்கு மட்டுமல்ல. எல்லோர்க்குமானதே...' என்ற சிந்தனைகள் அவருள் சிறகடிக்கும் சமயங்களில் வாழ்வின் நம்பிக்கை பற்றிக்கொள்ளும்.

மறுவிநாடி –

மீண்டும் பழைய நினைவுகள்... பழைய காட்சிகள்... அதே வலிகள்... அதே பிம்பங்கள்...

வானம் அழுது முடித்துவிட்டிருந்தது. ஆகாயமெங்கும் ஆக்கிரமித்து நின்ற மந்தாரம் மெல்ல விலகத்தொடங்குகிறது! வானில் அடம்பிடித்து நின்ற கருமேகக் கூட்டங்களைக் காற்றானது கடும் பிரயத்தனத்துடன் இழுத்தபடி... சென்று கொண்டிருந்தது! இருண்ட நிலப்பரப்பெங்கும் மெலிதான வெளிச்சத்தின் பிரதிபலிப்பு! வானத்தின் வெளிப்பின் பின் பூமியின் முகம் நன்கு தெரியத்தொடங்குகிறது.

இயற்கையின் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன!

வீட்டின் தாழ்வார வாசலில் நின்றவாறு, இந்த மாற்றங்களை அவதானித்துக் கொண்டிருந்த அவரது முகத்திலும் தென்பட்டன சில மாறுதல்கள்!

இயற்கை சூட்சுமமாக ஏதோ ஒன்றை வெளிப்படுத்திவிட்டுச் சென்றது போலிருந்தது அவருக்கு. பற்றற்று நின்ற மனம் எதையோ பற்றிப்பிடித்ததான உணர்வு அவருக்குள்.

வெளித்த வானத்தை நோக்கி அவரின் விழிகள் விரிகின்றன! நம்பிக்கை... அவருள் வேரூன்றத் தொடங்குகிறது. நீல வான்பரப்பில் குருவிகள் இரண்டு குதூகலித்தபடி... சிறகடித்துப் பறக்கின்றன.

நீண்ட நாட்களின் பின்பு...

பொலிவாகி புன்னகைக்கிறது அவரது முகம்!

ஆம்!

அழுகைகள் என்றுமே நிரந்தரமில்லை.

தினமுரசு வாரமலர் : 8.11.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக மாறுதல்கள்

நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது குருக்களின் மனம். அந்தணர் என்ற அந்தஸ்தோடு எல்லோராலும் "குருக்கள் ஐயா" என அழைக்கப்படும் நிலையில், கடந்த கால அரசியல் மற்றும் அனர்த்த நிகழ்வுகளின் எதிர் பிரதிபலிப்பானது அவரது வாழ்க்கையை சற்று ஆட்டம் காணவே செய்துவிட்டது.

"ஓய்... குருக்கள் நீர் என்னதான் அந்தணராக இருந்தாலும், ஐங்கரனுக்குப் பூசை செய்கின்ற ஐயராக இருந்தாலும் கோயில் எங்களுடையது. நீர் சம்பளத்துக்குத்தான் கோயில்ல பூசை செய்கிறீர் எண்டதை மறந் திடக் கூடாது காணும்! தீட்டுப்பட்டவன் தீட்டுப் பட்டவன் தான். அதில எந்த வித மாற்றமு மில்லை. முக்காலம் காகம் முழுகிக் குளித்தா லும் ஒரு நாளும் வெள்ளைக் கொக்காக மாறாது கண்டீரோ! உமக்கு இஷ்டமெண்டால் இருந்து பூசை செய்யும். இல்லாட்டி வேற எங்கை யெண்டாலும் போம் காணும்."

ஐங்கரன் ஆலயத் தர்மகர்த்தா சபைத் தலைவரின் வார்த்தைகள்... குருக்களின் காதுக்குள் உருக்கியூற்றிய ஈயம் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தன.

சபைத்தலைவர் கூறிய அக்கணத்தில் குருக்களுக்கு தன்மான உணர்வு தலைதூக்கிய போதும், பல வருடங்களாக அந்த ஐங்கரனுக்குப பூசை செய்து ஒன்றித்துப்போனதான உணர்வில்... அவரால் அதிலிருந்து விடுபட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

குருக்களின் நீண்ட கால சேவை... அவரது வயது... அதைவிட, இறைவனுக்கும் மக்களுக்கும் ஒரு தொடர்பாடலாய் விளங்கும் சேவகம்... அவரது சமூக அந்தஸ்து... அத்தனையும் கணக்கெடுக்காத மனோபாவத்துடன் தர்மகர்த்தா சபைத்தலைவர் தன்னுடன் நடந்து கொண்ட விதம் குறித்து, குருக்கள் தனக்குள்ளேயே குமைந்தழுத வண்ணம் இருந்தார்.

இத்தனைக்கும் மூல காரணம்... அவரது மகன்...?

வலிகாம இடப்பெயர்வோடு வன்னிக்கு இடம்பெயர்ந்து போன சூழ்நிலையைக் குறித்து குருக்கள் தனக்குள் வருத்தப்பட்டுக் கொள்கிறார்.

உயிருக்கு அஞ்சி... ஒதுக்கிடம் தேடிப்போனதன் நிமித்தம் இப்படி பின்நிலையில் உபத்திரவப்படவேண்டி வந்துவிட்டதே... என ஐங்கரனின் மூலக்கருவறைக்குள் அவனுக்கு நித்தமும் பூசைகள் செய்யும் போதெல்லாம் அவரது ஆழ்மனதிலிருந்து எண்ணங்கள் வெளிப்பட்டு, அவை கண்ணீராக விழிகளிலிருந்து வழிந்தோடுவதை வெளியில் உள்ள எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

'யாரை யார் நோவது? எனக்கான இன்றைய அவமான அவலத்துக்கு என் மகன் பாத்திரவாளியல்ல. இது எனது விதியுமல்ல! என் மகனது விதியுமல்ல. அரசியல் சதி... ஆம்! எமது இனத்துக்கான சரியான வழிநடத்துதலற்றவர்களினால் சின்னாபின்னபட்டுப் போயிருக்கும் குடும்பங்களில் எனது குடும்பமும் ஒன்று. இது எனக்கான பிரச்சினையல்ல. என்னைப் போன்ற அந்தணர் குடும்பங்களுக்கு மானது. இதற்கு யார் பொறுப்புக் கூறுவது? நாங்களா? அரசியலா? இல்லை ஆயுததாரிகளா?'

பூசை தவிர்ந்த நேரங்களில் ஐங்கரன் ஆலய முகப்பு மண்டபத்தின் கீழ் அமர்ந்திருந்தவாறு குருக்கள் தனக்குள்ளேயே சிந்தனை கொள்வதுண்டு. அவர் ஒரு போதும் தன் மகனில் பிழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொள்ளவில்லை. சந்தர்ப்பமும் சூழ் நிலையும் அவரது மகனை சகதிக்குள் இழுத்து விழுத்தியதற்கு, குருக்கள் அதற்கான அந்தச் சூழ் நிலை களை அடிக்கடி நினைத்தவண்ணம் மனம் வெதும்பிக் கொண்டிருந்தார்.

வன்னியில் போர் உச்சக்கட்டமாக ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், மறுபக்கம் 'பிள்ளைபிடிப்பு' வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 'ஐயர்மாருடைய பிள்ளைகளைப் பிடிக்க மாட்டார்கள்...' என்ற குருக்களது நம்பிக்கை சிதைந்து போனது. கடைசிக் கணத்தில் பயிற்சிக்காக பலவந்தமாக அழைத்துச் செல்லப் பட்ட தனது மகனை மீட்பதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனற்றுப் போனது குருக்களிற்கு.

'அந்தணர்' என்ற அந்தஸ்து அக்கணத்தில் எந்தவித பெறுமானமுமற்ற நிலையில், மனதுக்குள்ளே சபித்தலையும், சாபம் போடுதலையும் செய்தலைத்தவிர, குருக்களால் வேறு எதுவும் செய்யமுடியவில்லை. ஊரோடு ஒத்த நிகழ்வும் துன்பியலுமாக இருந்ததினால், எல்லோரையும் போலவே குருக்களும் அவரது மனைவியும் அழுது அரற்றிவிட்டு, ஓய்ந்து போய் இருந்தார்கள்.

மகனைப்பற்றிய எதுவித தகவல்களும் அற்ற நிலையில்... மக்களோடு மக்களாக அவலத்தைச்சுமந்தபடி... ஆங்காங்கு இடம் பெயர்ந்து இறுதியில் நலன்புரி முகாம் சென்று... அதன் பின் மூன்று வருடங்கள் கழிந்த நிலையில், மீள் குடியேற்றமாக திரும்பவும் ஐங்கரன் ஆலயத்தின் பிரதமகுருவாக பூசை செய்யும் நிலைக்கு உட்படுத்தப் பட்டிருந்தார் குருக்கள்.

வன்முறையில் ஈடுபட்டவர்களெனக் கூறி, அவர்கள் பூசா, வெலிக்கடை போன்ற சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையாகிக் கொண்டிருந்தார்கள். குருக்களிற்கு தனது மகனின் நிலைகுறித்து மனதுக்குள்ளே பல விதமான எண்ணங்கள்... சந்தோஷங்கள்.., விருப்பங்கள்... நிலவிய போதும் இறைநம்பிக்கையின் நிமித்தம் "எல்லாம் அவன் செயல்" என்ற மனப்பக்குவத்திற்குட்பட்டவராய், அமைதியாக ஐங்கரனுக்கு தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

அன்று விநாயகர் சதுர்த்தி ஆகையால் உதயகாலப்பூசைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதகாரர் பலர் வந்திருந்தார்கள். குருக்கள் வழக்கம் போல பூசைக் குரிய ஆயத்த மணியை அடித்து விட்டு திரும்பிய போது... அவரால் நம்பமுடியவில்லை! கோவிலில் கும்பிட நின்றவர்களுக்கும் அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி!

"மகன்..."

குருக்கள் ஓடிச்சென்று தனது மகனைக் கட்டி அணைத்து அழுதார்... கண்ணீர் சொரிந்தார்... சிரித்தார்... சில வார்த்தைகள் உதிர்த்தார்.

மகனது முகத்தில் எந்தவித உணர்ச்சிகளுமில்லை. அமைதி யாக நின்றான். அவர்கள் இருவரையும் சுற்றி ஐங்கரனை வழிபட வந்தவர்கள் புதினம் அறியும் ஆவலில்... கூடவே தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் சிலர்!.

குருக்களிற்கு மகிழ்ச்சி தாங்க முடியாமலிருந்தது. ஐங்கரனுக்குச் செய்த பணிவிடையின் பலன்... மகனைப் பத்திரமாக உயிரோடு கொண்டு வந்து கண் முன்னாலேயே விட்டிருப்பதாக அவர் நம்பினார்.

அதன் நிமித்தம் அவரது உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி அடைந்திருந்தன. வழக்கத்தை விட மூலஸ்தானத்துக்குள் சமஸ்கிருத சுலோகங்கள் அவர் வாயிலிருந்து சற்றுப்பலமாகவே ஒலித்துக் கொண்டன. கோவிலில் வழிபட வந்தவர்களோடு மனம் விட்டுக் கதைத்தார். பூசைமுடிவில் சிறுவர்களுக்கு மோதகம், கடலை, பிரசாதங்களை நிறையவே வழங்கினார். குருக்களின் முகத்தில் என்று மில்லாதவாறு நிறைந்திருந்தது புன்னகையின் பூரிப்பு.

மகனை உயிரோடு பார்த்து விட்ட மனமகிழ்வு நீடிக்கவில்லை குருக்களிற்கு. என்னதான் அந்தணர் என்ற அந்தஸ்தோடு சமூகத்தில் உயர்ந்த ஒருவராக கணிக்கப்பட்டாலும், ஒரு சபைக்குக் கீழிருந்து செயற்படும் போது சம்பளத்துக்கான ஒரு கூலியாள் என்ற கணிப்பீடே உயர் மட்டத்தினரிடை நிலவி வந்தது. குருக்களும் இதை அறியாதவரல்ல. ஆயினும், ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டினை அவர் பெரும் பேறாகக் கருதியநிலையில், கோவில்களில் தனக்கேற் படும் சில அவமானங்களை அவர் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு, அமைதியடைந்து விடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை ஐங்கரன் கோவிலின் தர்மகர்த்தா சபைத் தலைவர் குருக்களின் வீடு தேடி வந்திருந்தார். வீடு தேடி வந்த தலைவரை உட்காரும்படி கூறினார் குருக்கள். தலைவர் உட்கார வில்லை. நின்ற நிலையில் குருக்களுடன் கதைக்கத் தொடங்கினார். அவரது கதையில் பிரதிபலித்தது கடுமையின் வெளிப்பாடு.

"என்ன... ஐயர் மகன் வந்துட்டானாம்...?"

"ஓமோம்..."

"எங்கை இருந்தவராம்...?"

"வெலிக்கடைத் தடுப்பில..."

"மகன் வந்ததில ரொம்பச் சந்தோஷம் போலக் கிடக்குது."

"பின்ன இருக்காதே! எங்கட பிள்ளையைக் கண்டு இப்ப நாலு வருசத்துக்கு மேலாகுது. ஏதோ ஐங்கரன் பார்த்துக் கொள்ளட்டும்... எண்டு அவனில பழியைப் போட்டிட்டு இருந்தனான். பிள்ளையார் பத்திரமாகக் கொண்டு வந்து தந்திட்டார்..." சிரித்துக்கொண்டே கூறினார் குருக்கள்.

"மகன் இனி என்ன செய்யிறதா உத்தேசம்...?" சபைத்தலைவர் கேட்டார்.

"இனி முந்தின மாதிரி உந்த அடிபாடுகள்... சண்டையள் எழும்புற மாதிரித்தெரியேல்லை. பிள்ளைக்கு ஆசாரசுத்தி செய்து போட்டு, கோயில்ல எனக்கு உதவியாக நிற்கட்டுமென்று யோசிக் கிறன்" குருக்கள் கூறியதன் தாமதம் சபைத்தலைவருக்கு முகம் கடுகடுப்பாகிவிட்டது.

"ஓய்... ஐயர் என்ன காணும் விசர்க் கதை கதைக்கிறீர்? அவங்கள் பயிற்சிக்கெண்டு பிடிச்சுக்கொண்டு போனவங்கள். சும்மா விட்டிருக்க மாட்டாங்கள். துவக்கைக் குடுத்து சுடச்சொல்லியிருப் பாங்கள். இவனும் சுட்டுத்தள்ளி இருப்பான். சரி அதை விடுவம் வெலிக்கடையில வைச்சிருந்தவங்கள் உம்முடைய மோன் ஐயர் பொடியன் எண்டிட்டு மரக்கறிச் சாப்பாடே குடுத்து இருப்பான்கள். அங்க மச்சத்தண்ணியளைத் திண்டுபோட்டுவந்து நிற்கிறவனை எங்கட ஐங்கரன் கோயிலுக்குள்ள பூசை புனக்குகள் செய்யவிடுகிறதுக்கு எங்களை என்ன விசரர் பைத்தியக்காரர் எண்டு நினைச்சிட்டீரோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்... குருக்கள் நீர் என்னதான் அந்தணராக இருந்தாலும், ஐங்கரனுக்குப் பூசை செய்கின்ற ஐயராக இருந்தாலும், கோயில் எங்களுடையது. நீர் சம்பளத்துக்குத்தான் வேலை செய்கிறீர் எண்டதை மறந்திடக்கூடாது."

"நீங்கள் இப்படிக் கதைக்கிறதே ஆசாரமற்ற வார்த்தைகள். என் மகன் எதிரியளைச் சுடுகிறதுக்கும் மச்சத்தண்ணி தின்னுறதுக்கும் விரும்பிப்போனவன் அல்ல. பலவந்தப்படுத்தப்பட்டவன். அதற்கு ஆசாரசுத்தி செய்தால் நீங்கள் சொல்லுற அந்தத் தீட்டு நிவர்த்தியாகி விடும். மகன்ரை இந்த நிலைக்கு நானோ அல்லது நீங்களோ ஏன் என்ரை மகன்கூட பாத்திரவாளி அல்ல. இப்படிக் கடுமையாக நடந்து கொள்ளாதையுங்கோ."

குருக்கள் கூறியதன் தாமதம் சபைத்தலைவர் சினத்தின் உச்சிக்கே சென்று விட்டார்.

மறுநாள் புலர்ந்தும் புலராத அந்தக் காலைப்பொழுதில் குருக்களின் மகன் தனது பயணப்பொதியுடன் வெளிக்கிட ஆயத்தமாகி நின்றான்.

"அப்பா, அம்மா அழாதையுங்கோ, அராஜகத்தின் செயற்பாடு கள் ஒரு காலமும் நிலைக்காது. உங்களுக்கு இந்தக் கோயில், குடியிருக்கும் வீடு, வருமானம் இதைப்போல இன்னொரு இடத்தில் கிடைக்க வாய்ப்பில்லை. அதாலை நானே வெளிக்கிடுகிறன். நானே எனக்குரிய வாழ்க்கையைத் தேடிக்கொள்கிறன். இந்தச் சமூக வாழ்க்கையில சில சில மாற்றங்கள் சிந்திக்கக்கூடியவர்களால் ஏற்பட்டாலொழிய எங்களுக்கு இதிலிருந்து மீட்ச்சியில்லை. நான் போட்டு வாறன்."

கூறிவிட்டு குருக்களின் மகன் புறப்பட்டு விட்டான். மகன் போவதை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் குருக்களும் அவர் மனைவியும்.

அவன் அவர்களை விட்டுப் பிரிந்து மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டன. மகனது சிந்தனைகளுடன் நாட்களை நகர்த்திக் கொண்டிருந்த குருக்கள், ஒரு நாள் மாலைநேரப் பூசையை முடித்து விட்டு, கோயில் திறப்புக்களை தர்மகர்த்தா சபைத்தலைவரின் அறையில் ஒப்படைத்துவிட்டு, வீட்டை வந்தபோது அவரது மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத முகமாக அவர் முன் காட்சியளித்தாள்.

"என்ன இது ?"

"மகனைப்பற்றி ஊரிலை ஏதோ கதையடிபடுகுது."

குருக்கள் எதுவும் கூறாது, தன் பாதரட்சைகளை வீட்டு வாசலில் கழற்றிவிட்டு வெளித்திண்ணையில் அமர்ந்து கொண்டார். குருக்களின் செய்கை அவரது மனைவிக்கு குழப்பமாக இருந்தது. அவளும் மெல்ல அருகில் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்தாள். குருக்கள் திரும்பி தன் மனைவியை அன்பொழுகப் பார்த்தார்.

"ஏன் அழுகிறாய்...? இப்ப என்னநடந்திட்டுது..? அவன் என்ர பிள்ளை! சில பிரச்சினைகளுக்கான முடிவுகளை சீர் தூக்கமாகத்தான் பார்ப்பான், எடுப்பான். கோவிலடிக்கு கும்பிட வந்த ஒருவர் எல்லாத்தை யும் விபரமாகச் சொல்லிப்போட்டுப் போறார்."

"அப்ப உங்களுக்கு எல்லாம் தெரியுமே...?" வியப்பு பொங்க மனைவி கேட்டாள்.

"தெரியும்! என்ர பிள்ளை போராட்டத்தை விரும்பினவனல்ல. அந்தணர் குலத்துக்கு அது தேவையான ஒன்றும் அல்ல. போராட்டம் அவனை வலிய இழுத்துக் கொண்டதற்கு அவன் காரணமல்ல. அவனைத்தீட்டுப்பட்டவன்... எண்டு சொல்லிறவை முதலில் தாங்கள் ஆசாரசீலர்களா? எண்டதை யோசிக்க வேணும். பயிற்சி எடுத்த குற்றத்துக்காகவும் தடுப்பில இருந்த காரணத்துக்காவும் இந்தச் சமூகம் அவனை ஒதுக்கிறமாதிரி நாங்கள் ஒதுக்கேலாது. ஏனென்டால் அவன் எங்கட பிள்ளை. அதுவும் ஒரே பிள்ளை. எங்கை இருந்தாலும் உயிரோடை நல்லாயிருந்தால் அதுவே நமக்குப்போதும்."

"அதுக்காக அவன், போய்ச் சேர்ந்திருக்கின்ற இடம்?"

"அதைப்பற்றி எனக்குப் பிரச்சினை இல்லையம்மா. அவன் கலியாணம் கட்டியிருக்கிறது நமக்கு உடுப்பு வெளுத்துத்தாற கட்டாடியின்ர மகள் எண்டதும் எனக்குத் தெரியும். அந்தப்பிள்ளைக்கும் எங்கட மகனுக்குரிய பிரச்சினை போலத்தானாம். அந்தப்பிள்ளை 'கம்பசில' படித்துக் கொண்டிருந்தவளாம். அநாவசியமான சிலரது செயற்பாடுகளால அந்தப்பிள்ளையும் தடுப்பில இருந்து விட்டு வந்திருக்கிறாள். தடுப்பில இருந்த ஒரு காரணத்துக்காக அவளின்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில அவளை ஒருத்தரும் கலியாணம் கட்ட மறுக்கினம். அதால அவளும் எங்கட மகனும் கலந்து பேசி ஒரு முடிவெடுத்திருக்கினம் போலக்கிடக்குது. இது என்னைப்பொறுத்த வரையில ஒரு நல்ல முடிவு. இதை நான் வரவேற்கிறன். இனி அவர்களில் இருந்து ஒரு புதிய தலைமுறை உருவாகட்டும். அப்பத்தான் தீட்டுக்களும் மறையும்! இந்தச்சமூகம் திருந்தும்..." கூறிவிட்டுக் குருக்கள் தன் மனைவியைப் பார்த்துச் சிரித்தார்.

முப்பத்தைந்து வருட தாம்பத்தியவாழ்வின் அனுபவம்... அவரைப்புரிந்து கொண்டவளாய், அவளும் தன் கணவனைப்பார்த்து புன்னகைத்துக் கொண்டாள். அந்தப்புன்னகையில் சமூக மாறுதல் களை அவளும் வரவேற்கிறாள் என்பது விளங்கியது குருக்களுக்கு.

ஞாயிறு தினக்குரல் : 21.4.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யதார்த்தத்தைப் பதிவுசெய்யும் எழுத்தாளன்**

புதுக்குடியிருப்பை வாழ்விடமாகக் கொண்ட அலெக்ஸ் பரந்தாமன் நீண்ட காலமாக எழுதி வருபவர். எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து எழுதத் தொடங்கி, தொண்ணூறுகளின் நடுப்பகுதியிலிருந்து மும்முரமாகத் தொடர்ந்து எழுதி வந்தவரின் முதலாவது சிறுகதைத் தொகுதி, காலம் செய்த கொடுமையினால், இப்போது தான் வெளிவருகிறது. போரின் போது தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களின் ஒரு பகுதியை இத்தொகுப்பில் உள்ள கதைகள் வெளிப்படுத்துகின்றன.

பல புனைபெயர்களில் போரியல் சார்ந்த இலக்கியங்களையுழ் சமூகம் சார்ந்த பத்தி எழுத்துக்களையும் அடிமட்ட உழைப்பாளிகளுடான நேர்காணல் களையும் எழுதி வந்த அலெக்ஸ் பரந்தாமன் பத்திரிகை ஊடகங்களிலும் பணிபுரிந்த அனுபவஸ்தர். போருக்குப்பின்னரான இன்றைய நாட்களிலும் தொடர்ந்து நவீனம், பத்தி எழுத்துகள், ஆன்மீகம், சிறுகதை, கவிதை, கட்டுரைகள், பெண்ணியக் கவிதைகள் என பல்துறைகளிலும் எழுதிவரும் இவர் ஒரு சிறந்த விவசாயியும் ஆவார்.

விலை: 250/=

ISBN 955467617-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org